# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 17 வியாழக்கிழமை (2-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:273


## சமாதான முயற்சியில் புதிய திருப்பம்

# நோர்வே தூதுக்குழு வன்னியில்

# பிரபாகரனுடன் முக்கிய பேச்சு!



பிரபா

### திருப்திகரமாக அமைந்ததாகத் தகவல்

வவுனியா, நவம்பர்2

**இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சிகளில் நேற்றுப் புதிய திருப்பம். எவரும் எதிர்பாராத விதமாக நோர்வே சமாதானக்குழு நேற்றுப் பிற்பகல் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து முக்கிய பேச்சுக்களை நடத்தியது.**

**நேற்றைய சந்திப்பின்போது இருதரப்பு சமாதான முயற்சிகள் குறித்தும் ஆராயப்பட்டது. தலைவர் பிரபாகரனுடனான சந்திப்புக் குறித்து நோர்வே சமாதானக் குழு திருப்தி தெரிவித்ததாக 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு அறிவித்தது.**



தமிழ்ச்செல்வன்

இலங்கையின் இனப்பிரச்சினைக்குச் சமாதானத் தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவினர் நேற்று விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பிரதேசத்துக்குச் சென்று தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நோர்வே விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் தலைமையிலான குழுவில் இலங்கைக்கான நோர்வே நாட்டுத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் மற்றும் நோர்வே வெளிவிகார அமைச்சு அதிகாரி ஜோன் வெஸ்ட்.'.பொக்ஸ் ஆகியோரும் அங்கம் வகித்தனர். மிகவும் இரகசியமாக வைக்கப்பட்டிருந்த இந்த விஜயம் தொடர்பான தகவல் நேற்றிரவே வெளியானது.

வன்னிக்குச் சென்ற சமாதானக் குழுவினரை நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வரவேற்றார். நேற்றுப் பிற்பகல் நடைபெற்ற தலைவர் பிரபாகரனுடனான இந்தச் சந்திப்பில் போராட்டத்தின் உண்மை நிலைமையையும் வன்னிப் பகுதி மக்கள் மீது அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் இன அழிப்பு யுத்தம் பற்றியும் தலைவர் பிரபாகரன் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இது நிச்சயம் அனைத்துலக சமூகத்திற்கு எமது போராட்டத்தின் நியாயத்தையும் உண்மைத் தன்மையையும் எடுத்

(12ஆம் பக்கம் பார்க்க)



எரிக் சொல்ஹெய்ம்

### மதுரையில் கண்டனச் சுவரொட்டிகள்

சென்னை,நவ.2

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து தமிழ்நாட்டில், மதுரை நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

(12ஆம் பக்கம் பார்க்க)

## நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து நகரில் நேற்று உணர்வுபூர்வ ஆர்ப்பாட்டம்!

யாழ்ப்பாணம், நவ.2

பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதிப் போராட்டம் நேற்று யாழ். மத்திய பஸ் நிலையப் பகுதியில் மிகவும் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

குடாநாட்டைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள், செய்தியாளர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்களுடன் மதத்தலைவர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்தோர், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், எழுத்தாளர்கள், கூட்டுறவாளர்கள் நூற்றுக்கணக்கானோர் இந்த அமைதி ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டனர்.

முற்பகல் 10.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் ஆரம்பமாகியது. ஆர்ப்பாட்டதில் கலந்துகொண்டோர் வாயையும், கைகளையும், கறுப்பு துணிகளால் கட்டியிருந்தனர். மனித உரிமைகள், பத்திரிகைச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் என்பவற்றை வலியுறுத்தும் வாசகங்கள் அடங்கிய பதாகைகளையும் அவர்கள் வைத்திருந்தனர். தமிழ்,சிங்களம், ஆங்கிலம் ஆகியமொழிகளில்அவை எழுதப்பட்டிருந்தன.

10.30மணி முதல்10.32மணிவரை இரு நிமிட நேரம் எழுது கோல்களைக் கீழேவைத்து அஞ்சலி செலுத்தி ஆரம்பமான ஆர்ப்பாட்டம் நண்பகல் 11.45 வரை தொடர்ந்து நடைபெற்றது.

யாழ். ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் வண.எஸ். ஜெபநேசன்,' யாழ். மறை மாவட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## மந்துவிலில் கிளைமோர் தாக்கு; 2 அதிகாரிகள், சிப்பாய் பலி!

கொழும்பு,நவ.2

மந்துவில் பகுதியில் படையினர் பயணம் செய்த "டிரக்" வண்டி மீது நேற்று விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலில் இரு அதிகாரிகள் உட்பட மூன்று படையினர் உயிரிழந்தனர்; ஆறு படையினர் காயமடைந்தனர் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

எழுதுமட்டுவாழ், கிளாலிப் பகுதிகளில் அமைந்துள்ள முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப்புலிகள் நேற்று மேற்கொண்ட மோட்டார் தாக்குதலில் நான்கு படையினர் காயம்

(12ஆம் பக்கம் பார்க்க)




நேற்று நகரில் நடைபெற்ற அமைதி ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை மேலே உள்ள படங்களில் காணலாம். யாழ்.ஆயர் அதி.வண. தோமஸ் சௌந்தரநாயகம், தென்னிந்தியத் திருச்சபை பேராயர் அதி.வண.எஸ்.ஜெபநேசன் மற்றும் மதகுருமார்களை முதலாவது படத்தில் காணலாம். கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராசா, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் ஆகியோரை இரண்டாவது படத்தில் காணலாம். ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பெண்களில் ஒரு பகுதியினரையும் ஏனையோரையும் அடுத்துள்ள படத்தில் காணலாம்.

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## லொறி விபத்துச் சம்பவம்:

# மூன்றாவது சந்தேகநபர் பற்றி தகவல் தருமாறு கோரிக்கை

கடந்த மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் இடம்பெற்ற லொறி விபத்துச் சம்பவம் தொடர்பாக தலைமறைவாகியுள்ள மூன்றாவது சந்தேகநபர் தொடர்பான விவரங்களை யாழ். நீதிமன்றம், யாழ்.சிவில் அலுவலகம் மற்றும் தனியார் சிகிச்சை நிலையங்களிடம் கோரியுள்ளது.

இந்த விபத்தின் மூன்றாவது சந்தேகநபரான யாழ்ப்பாணம் ஜும்மா பள்ளிவாசல் லேனைச் சோந்த ஏ. ஆர்.ஏ. றாபீக் என்பவர் எப்போது குடாநாட்டிலிருந்து வெளியேறினார், வெளிமாவட்டத்தில் அவர் தங்கியுள்ள முகவரி போன்ற விவரங்களை யாழ்.நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறு யாழ். சிவில் நிர்வாக அதிகாரிகளிடம் கோரப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் போது காயமடைந்த பிரஸ்தாப நபர் அன்றைய தினம் எங்காவது சிகிச்சை பெற்றுள்ளாரா? என்பதை அறியும் பொருட்டு நகரிலுள்ள தனியார் சிகிச்சை நிலையங்களிடமும் தகவல் கோரப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களான ஆறுமுகம் வேலாயும், அப்துல் காதர் மொபீன் ஆகியோரின் பிணை விண்ணப்பம் நேற்றும் யாழ் நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. (ஐ-5-ரி)


## இந்து சமயம் தழைத்தோங்க இறையனார் – தந்த ஆலவிருட்ஷம் – அருட்கவி ஐயா!



**30.10.2000 இல் அவர்கள் ஆக்கிய கந்தபுராண - வசன காவியம் வெளிவந்ததையிட்டு இறைதாள் வணங்கி வாழ்த்துகின்றோம்.**

ஆக்கம் அளித்தலொன்றும், அன்பு விதை விதைத்து
ஊக்கம் கொடுக்கும் உரை இரண்டு – மாகடல் போல்
கூடித் தமிழ் காக்கும் கூட்டுறவு மூன்றாகும்
தேடிக்கொடுப்பார் நிறம்!

இவை
அன்பன்
இயற்கை நேசன் – குறள் வழி வள்ளல
**கே.கே.எம்.கனகராசா**

**'சுதர்ஷனம்'**
**ஐடியல் பேக் ஹவுஸ்**
மகாத்மா வீதி,
நெல்லியடி - கரவெட்டி

(800( )



## பள்ளிப் பருவத்திலே எம் தோழமைகளை விட்டுப் பிரிந்த அன்புத் தோழி சியாமளாவின்

# ஓராண்டு நீங்காத நினைவலைகள்

**இதயம் மகிழ்ந்திட மண்ணில்**
**17 - 04 - 1981**



**இதயம் நெகிழ்ந்திட விண்ணில்**
**02 - 11 - 1999**

## செல்வி
# சியாமளா ஆறுமுகம்

(2000 கலைப்பிரிவு மாணவி, யா/ஆ.தியாகராஜா ம.ம.வித்.)

கலை என்னும் பாடத்தை தனதாக்கிக் கொண்டு அதிலும்
இசைத்துறையில் சிறப்பாக விளங்கிய எம் அன்பின் சிகரம் சியாமளா
வர்த்தகமும் கலையும் இணைந்த ஒரே கூண்டில் வாழ்ந்த நாள்களை
எங்களால் வாழ்நாளில் மறக்க முடியுமா- தோழி
தலைமைத்துவம் பற்றி உரை நிகழ்த்த இருந்த எம் தோழி சியாமளாவை
முதல் நாள் மாலைப் பொழுதில் நீராடச் சென்ற வேளை
காலன் நீரில் மறைத்தது ஏனோ?
நாற்பண்புகளால் ஓங்கியதே உந்தன் புகழ் காரை மண்ணில் - அவை
வருடம் ஒன்று உருண்டோடினாலும் எம் நெஞ்சை விட்டு நீங்கவில்லை
அன்பின் இருப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் பிறப்பிடமாய், தோழமையின் தலைவியாய் - இருந்து
எமை எல்லாம் நல்வழிகாட்டிய அன்புத் தோழி சியாமளாவின்
நினைவலைகள் எம் தோழமைகளை விட்டு என்றென்றைக்கும் அகலாது
இறைவன் திருவடியில் நீ என்றும் வாழ்கின்றாய் சியமாளா
ஆதலால் தோழமைகள் அனைத்தும் அவனடி தொழுது ஆறுதல் பெறுவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**2000 வர்த்தக,**
**கலைப்பிரிவு மாணவர்கள்,**
காரைநகர். (800( )


## இறுதியாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.2

வலிகாமம் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும்.

வலிகாமம் வலயக் கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.சந்திரபாலன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரதிக் கல்விப் பணிப்பாளர் சங்கீத பூஷணம் சு.கணபதிப்பிள்ளை கலந்து கொள்வார்.

★ ★ ★

யாழ்.கோட்டப் பாடசாலைகளுக்கிடையே யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டங்கள் இன்று காலை 8.30 மணிமுதல் நடைபெற உள்ளன.

பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

* 16 வயதுப்பிரிவில்- புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம் எதிர் யாழ்.மத்திய கல்லூரி.

* 18 வயதுப் பிரிவில்- புனித ஜேம்ஸ் மகாவித்தியாலயம் எதிர் நாவாந்துறை றோ.க. வித்தியாலயம்.

## பரீட்சைகள்

பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்புக்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளிலும்-

கிராம அலுவலர்களை சிறப்புத் திறமையின் அதியுயர் தரத்துக்கு பதவி உயர்வளிக்கும் பரீட்சை எதிர்வரும் 4ஆம் திகதியும் - வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம்பெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கான அனுமதி அட்டைகளை கொக்குவில் இந்துக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் யாழ்.வலயக் கல்விப் பணிமனையில் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. பரீட்சைத் தினத்தன்று பரீட்சை நிலையத்திலும் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## கலந்துரையாடல்

திறந்த பல்கலைக்கழகத்தில் கல்விமாணி கற்கைநெறிக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு கற்கைநெறிப் பதிவு தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.

மேற்படி கலந்துரையாடலில் கல்விமாணி கற்கைநெறி விண்ணப்பதாரிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிராந்திய நிலைய இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார். (ஐ-69)

## விவசாய ஓய்வூதிய விவரம்

சாவகச்சேரி பல நோ.கூ.சங்க கிராமிய வங்கியில் மார்ச் மாதம் ஓய்வூதிய தவணைக் கட்டணம் செலுத்தியோரின் விவரங்கள் கொழும்புக்கு அனுப்பப்படவுள்ளதால் வங்கியில் மார்ச் மாதத்தில் தவணைப்பணம் செலுத்தியோரில் 02185 தொடக்கம் 02195 வரையான பற்றுச்சீட்டு வைத்திருப்போர் உடனடியாக நெல்லியடியில் இயங்கும் சாவகச்சேரி பல நோ.கூ.ச. கிராமிய வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறு பொது முகாமையாளர் அறிவித்துள்ளார். (ஐ-117)


**நாகம்ஸ்** சுன்னாகம்

**அஜித் (இரு வேடம்), சிம்ரன், விவேக் நடித்த**

**வாலி**

(ரீல்ஸ்) காட்சிகள்- 11.00, 2.30 (பு.நே)

(80053)



**ராஜா** யாழ்ப்பாணம்

**விஜய், ஜோதிகா, விஜயகுமார்**
மற்றும் பலரின் நடிப்பில்

**குஷி**

காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
06.11.2000 தொடக்கம்

(C/13648)

**பூமகள் ஊர்வலம்**


# 'கானப்பிரியா' நடராஜ ஐயர் காலமானார்

பிரபல சங்கீத ஆசிரியரும் எழுத்தாளரும் சோதிடருமான 'கானப்பிரியா' பிரம்மஸ்ரீ எஸ்.என். நடராஜ ஐயர் கடந்த மாதம் பிற்பகுதியில் கொழும்பில் காலமானார்.

இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் பலவருடங்கள் ஆசிரியராகப் பணி புரிந்தவர் சங்கீதத்தில் பெரும் புலமை மிக்க இவர் 'இசை நடனக் களஞ்சியம்' என்ற அரிய நூலின் ஆசிரியராவார்.

'உதயன்' நிறுவனம் வெளியிட்ட 'ஜோதிட ஜோதி' மாத இதழின் ஆசிரியராகப் பணி புரிந்தவர். இவர் சிறந்த சமய எழுத்தாளருமாவார். (அ)


# COMPUTER - கணனி

கணனித்துறை சார்ந்தவர்களுக்கு
இதோ ஒரு நற்செய்தி!



**மிலேனியத்தில் பாதம் வைத்த உங்களுக்குத் தேவையான பல நவீன தற்காலிக COMPUTER மெருகூட்டும் மாதிரி வடிவங்களில்**

இன்றே உங்கள் கைகளில் — **கணனி**

★ LAP - TOP (கைக்கு அடக்கமானது) (TOSHIBA)
★ PRINTER 1) DOT MATRIX 2) LASER 3) INK - HEAD } MULTI STYLE MODELS
★ UPS AND ACCESORIES

குறிப்பு: - ஆஸ்பத்திரி வீதி, லிங்கன் ஸ்ரோர்ஸில் பணம் செலுத்தியவர்கள் பதிவுடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மேலதிக தொடர்புகளுக்கு :-

**SRI MURUGAN COMMUNICATION**
**COMPUTER SYSTEM**
No. 303, K.K.S .Road,
Jaffna.
T.P :- 3588, 2670, 3214

(C/13661)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யாழ்.மாவட்ட மக்களின் வளமான வாழ்விற்கு பல இன்னல்களின் மத்தியிலும் அளப்பரிய பணிகளை ஆற்றிவரும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலதிபரும், வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ்மொழி விவகார அமைச்சருமான கௌரவ**

## கே.என்.டக்ளஸ் தேவானந்தா

**அவர்களையும், அவர்களோடு நாடாளுமன்றம் சென்றிருக்கும் ஏனைய உறுப்பினர்களையும் நல்லூர் பிரதேச சபை மக்கள் சார்பிலும், பிரதேச சபை சார்பிலும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

தலைவர், உறுப்பினர்கள்,
செயலாளர், உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்,
நல்லூர் பிரதேச சபை.

(80119)



# மரண அறிவித்தல்

## பொடிமாத்தயா சந்திரபாலன்

(உரிமையாளர் - தீபன் கிறீம் ஹவுஸ்)

நல்லூரைப் பிறப்பிடமாகவும்,நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட பொடிமாத்தயா சந்திரபாலன் நேற்று(01.11.2000) புதன்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொடிமாத்தயா - செல்வமலர்(ஆச்சான்) ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும் ரட்ணசிகாமணியின்(R.V.G. ரான்ஸ்போட்) பெறாமகனும் ரேணுகாவின் அன்புக்கணவரும் ஜெயபாலன் (உரிமையாளர்-லக்ஷமி ரான்ஸ்போட்), சந்திரகுமாரி(குட்டி-லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பார்த்திபன்(மாணவன்,நவாலி சென். பீற்றர்ஸ் றோ.க.த.க.பாடசாலை),நிதுஷன் ஆகியோரின் அன்புத்தந்தையும் கவிதாலக்ஷ்மியின் (மாணவி.உடுவில் மகளிர்கல்லூரி) சிறியதந்தையும் அச்சுதன் (லண்டன்), பத்மநாபா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் ஜானகி, விஸ்வநாதன்(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.11.2000) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நவாலி கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயபாலன்
(சகோதரன்)

நவாலி வடக்கு,
மானிப்பாய்.

(80126)

உதயன்

## சூளுரை அமைதி தருமா?

1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்றது போன்ற பெரும் இனக்கலவரத்துக்கு, நாடளாவிய இரத்தக் களரிக்குத் தாம் ஒரு போதும் இடம் அளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதி அளித்துள்ளார்—சூளுரைத்திருக்கிறார்

பண்டாரவளைப் படுகொலைகளைச் சாட்டாக வைத்து சில தீய சக்திகள்-இனவாதக் குழுக்கள் — இனக்கலவரம் ஒன்றுக்குத் தூபமிட முனைகின்றன. மீண்டும் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடுவதற்கு அரசாங்கம் அனுமதிக்காது. அதற்கேற்ற வகையில் பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுக்கப்படும் — என்றும் ஜனாதிபதி கூறியுள்ளார்.

இனவாதக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக்கூடாது என்று அவர் சிங்கள மக்களுக்கும் வேண்டுகோளும் விடுத்திருக்கிறார்.

நாட்டு மக்களுக்கு ஆற்றிய வானொலி உரையில் ஜனாதிபதியின் மேற்கண்ட உறுதி மொழி வந்திருக்கிறது.

அமைதி விரும்பும், சமாதானம் விரும்பும் சகல தரப்பு மக்களும் ஜனாதிபதியின் மன உறுதியை வரவேற்பர்.

1983 ஆம் ஆண்டு கறுப்பு ஜூலையில் இடம்பெற்ற இரத்தக்களரி இனக்கலவரம் என்று சொல்வதற்கு உரியதல்ல. தென்னிலங்கைப் பிரதேசத்தில் தமிழ் மக்கள் மீது சிங்கள ஆயுதபாணிகள், குண்டர்கள், இனவாதிகள் சேர்ந்து நடத்திய காட்டுமிராண்டித் தனமான துவிபும் மனிதாபிமானமற்ற ஈனத்தனமே அதுவாகும். மிருகவெறி தலைக்கேறி அவர்கள் நடத்திய அரக்கத்தனம் மிகுந்த பரந்த அளவிலான கோரமான நிகழ்வு அது.

கறுப்பு ஜூலை நாட்டு அரசுக்கு மட்டுமன்றி, சிங்கள இனத்துக்கே, இலங்கை நாட்டுக்கே உலகளாவிய ரீதியில் பெரும் அபகீர்த்தியையும் அவமானத்தையும் உண்டாக்கியது. கறுப்பு ஜூலை கோரத் தாண்டவமாடிய சில வருடங்களிலேயே சிங்கள அரசியல் தலைவர்களும், புத்திஜீவிகளும் இது குறித்து கழிவிரக்கம் கொண்டனர், வெட்கித் தலை குனிந்தனர்.

கறுப்பு ஜூலை போன்ற சம்பவங்களைத் தடுப்பதில் உள்ள அக்கறையும், நடவடிக்கைகளும் ஏனைய படுகொலைகள், வன்செயல்களைத் தடுப்பதிலும் செலுத்தப்பட வேண்டும். நாட்டில்நடைபெறும் ஒவ்வொரு சிறிய வன்செயலின் பின்னணியையும், காரணத்தையும், சூத்திரதாரிகளையும் கண்டுபிடித்துக் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்.

ஆனால் பல வன்செயல்களும், குற்றச் செயல்களும் பூரண விசாரணைகள் இன்றி சாய்ந்தால் சாயும் பக்கமாக மூடி மறைக்கப்படுகின்றன; அல்லது ''அம்போ'' என்று கைவிடப்படுகின்றன.

வன்செயல்களின் சூத்திரதாரிகள், பின்னணி என்பனவற்றைக் கண்டுபிடித்தால் மட்டும் போதாது. அவைபோன்ற சம்பவங்கள் வேறு நடைபெறாமல் தடுக்கப்பட வேண்டும். அந்த வல்லமை அரசிடம் இருப்பதாக அதன் செயற்பாடுகள் எடுத்துக்காட்டவில்லை.

பாதுகாப்பை இறுக்குவதால் கலவரங்களை, வன்செயல்களைத் தடுத்துவிட முடியாது. நாட்டில் வேரூன்றி உள்ள இனக்குரோதத்தையும் விரோதத்தையும் ஒழிக்க வேண்டும். அதற்கு உள்ள ஒரேயொரு மார்க்கம் இனப்பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்றைக் காண்பதே ஆகும்; போரை நிறுத்துவது தான்; வெறும் சூளுரைகள் மக்களுக்கு நன்மையையோ, அவர்கள் அவாவும் பாதுகாப்பையோ, அமைதியையோ, நிம்மதியையோ தர மாட்டா!

# இராணுவத்தீர்வின் மறைமுக அர்த்தம் அடுத்தவரை அழிப்பதுஎன்பதுதானா?

## இந்த மனோபாவம் நாட்டுக்குப் பேரழிவையே தரும்

கொழும்பு, நவ 2

இராணுவத் தீர்வு என்பதன் மறைமுக அர்த்தம் அடுத்தவரை அழிப்பதென்றே பொருள் கொள்ளக் கூடியதாக உள்ளது என்ற மனோபாவம் காணப்படுகிறது. ஏனெனில் அந்த அடுத்தவரை பேச்சு மூலமாகவோ, அரசியல் சீர்திருத்தம் மூலமாகவோ மாற்ற முடியாது என்று நம்பப்படுகிறது. பண்டாரவளையில் விடுதலைப் புலி கைதிகள் கொல்லப்பட்டமை இந்த மனோபாவத்தை சர்வதேசமயமாக்குவதின் சாத்தியத்தை வெளிப்படுத்துகின்றது.

பண்டாரவளை பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைகளை ஒட்டி தேசிய சமாதானப் பேரவை சார்பில் அதன் ஊடகத்துறைப் பணிப்பாளர் ஜெகான் பெரேரா வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யுத்த மனோபாவத்தை வடக்கு — கிழக்கில் மட்டும் மட்டுப்படுத்திவிட முடியாது என்பதையே பண்டாரவளையில் இடம்பெற்ற சம்பவம் எடுத்துக் காட்டுகின்றது.

பண்டாரவளைப் புனர்வாழ்வு முகாமில் அரசாங்கத்தின் பாதுகாப்புடனும் மேற்பார்வையின்கீழும் இருந்த 29 கைதிகளும் கொல்லப்பட்டமை திகிலூட்டும் குற்றச் செயல்.

தேசிய சமாதானப்பேரவை இப்படுகொலைச் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறது.

கொடூரமான இச் சம்பவமானது மனிதாபிமான நடவடிக்கை மற்றும் சட்டத்தை அமுல் படுத்தும் அரசாங்கத்தின் பிரிவுகள் மீது கொண்டிருக்கும் நம்பிக்கையைத் தகர்த்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைமை மிகவும் குழம்பிப் போனதொன்றாகவுள்ளது. இராணுவத்தீர்வைக்கொண்டு வருவதாக உறுதிமொழி வழங்கிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது என்ற உண்மையால் நிலைமை மேலும் சிக்கலடைந்துள்ளது யுத்தத்தில் விடுதலைப்புலிகளை அழிக்கப்போவதாகப் பொது ஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் பிரசாரத்திற்குத் தலைமை தாங்கிய பிரதமர் உறுதியளித்திருந்தார். அத்துடன், அரசியலமைப்புச் சட்டமூலம் சட்டமாக நிறைவேற்றப்படுவதற்கும் தனது எதிர்ப்பை அவர் வெளிப்படுத்தியிருந்தார்

தேர்தலின் பின்னர் தேசிய நல்லிணக்கம் ஏற்பட வேண்டிய தேவை குறித்தும் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண வேண்டியது தொடர்பாகவும் ஜனாதிபதி பேசிவருகிறார்.

பொது மக்கள் மத்தியில் இரட்டைத் தன்மையுடன் நடந்து கொள்வதற்குப் பதிலாக இனநெருக்கடி தொடர்பாகத்தனது நிலைப்பாட்டை அரசாங்கம் தெளிவுபடுத்த வேண்டும் என்று தேசிய சமாதானப்பேரவை அழைப்பு விடுக்கிறது.

அதே சமயம் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரே வழியாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை மேற்கொண்டு அரசமைப்புச் சீர்திருத்தத்தை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம். எதிரணியின் பங்களிப்புடன் இதனை மேற்கொள்ள முடியுமென நாம் கருதுகிறோம். சமாதானத்திற்கான புதிய அரசியல் முயற்சி தொடர்பாக விடுதலைப்புலிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம். யுத்தம் தீவிரப்படுத்தப்பட்டும் பண்டாரவளையில் அண்மையில் இடம்பெற்றதைப் போன்ற குரூரமான நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுமிருந்தால் நிலைமை மேலும் மோசமானதாகிவிடும்.

(தேசிய சமாதானப் பேரவையின் இந்த அறிக்கையின் ஒரு சில பகுதிகள் உதயனில் ஏற்கனவே வெளியாகி இருந்தன) (ஐ-8)

## சுகாதாரக் கருத்தரங்கு

தென்மராட்சி, நவ. 2

சாவகச்சேரி லயன்ஸ்கழகத்தினால் அண்மையில் தெல்லிப்பளை பன்னாலையில் சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நடத்தப்பட்டது.

பன்னாலை மாதர் கிராமிய அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கழகத் தலைவர் லயன் கா. சற்குணதேவன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் சர்வதேச லயன்ஸ் கழக முன்னாள் பிராந்தியத் தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சர்வதேச கெயர் நிறுவன பிரதி பிராந்தியப் பிரதிநிதி பா. சந்திரமோகன் கலந்துகொண்டார். (317)

## பண்டாரவன்னியன் தினம் வன்னியில் அனுஷ்டிப்பு

வவுனியா, நவ 2

பண்டாரவன்னியனின் 197 ஆவது நினைவு தினம் நேற்று முன்தினம் வன்னியிலுள்ள ஒட்டுசுட்டானில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டானிலிருந்து கற்சிலைமடு வரையும் பண்டாரவன்னியனின் உருவப்படம் தாங்கி ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்தில் இறுதியில் கற்சிலைமடுவில் நினைவு தின நிகழ்வுகள் இடம்பெற்றன

இதேவேளை வவுனியா அரச செயலக வளாகத்திலும் பண்டாரவன்னியன் நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

அங்குள்ள பண்டாரவன்னியனின் உருவச்சிலைக்கு மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு நினைவு தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (இ-5-164)

## பொதுமண்டபத் திறப்பு விழா

அளவெட்டி கிழக்கு கும்பலையில் அமைக்கப்பட்டுள்ள புதிய பொது மண்டபத்தின் திறப்புவிழா நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் ஒரு மணிக்கு மா. தேவராசா தலைமையில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலி. வடக்குப் பிரதேச செயலர் திருமதி திலகநாயகம் போல் கலந்துகொள்வார். (இ-3)

## கோரிக்கை

பண்டாரவளைத் தடுப்பு முகாமுக்குள் காடையர்கள் குழு நுழைந்து மிலேச்சத்தனமான தாக்குதல்களை நடத்தும் வரை அவற்றை எவரும் தடுத்து நிறுத்தாமல் இருந்தமை ஆச்சரியப்படக்கூடியவிடயம். இந்தத் துன்பகரமான சம்பவங்கள் இடம்பெற அனுமதிப்பது நாட்டுக்கும் மக்களுக்கும் வெட்கம் தரும் விடயம்.

இவ்வாறு பொ.ஐ முன்னணியில் அங்கம் வகிக்கும் கம்யூனிஸ்ட்கட்சியின் பொதுச் செயலர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவங்கள் குறித்து பக்கச் சார்பற்ற விசாரணைகள் நடத்த வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (இ-8)

## வினாடி வினாப் போட்டி

வலிகாமம் தெற்கு, நவ, 2

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளின் வலயமட்ட விவசாய வினாடி - வினா இறுதிப் போட்டிகள் எதிர் வரும் சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும்.

வலிகாமம் கல்வி வலயத்தில் ஜூலை மாதம் முதலாம் திகதி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கோட்டமட்ட விவசாய அறிவுப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கிடையே இவ் வினாடி வினாப் போட்டி நடைபெறும்.

(ஐ-152)

**உதயவாக்கு**

படிப்பை நீ நேசித்தால் நீ படித்தவனாகிவிடுவாய்,

— சோக்ரடீஸ்.

## நாளை

ஐப்பசி 18

வெள்ளிக்கிழமை

திதி: ஸப்தமி முன்னிரவு 10.36 வரை.

நட்சத்திரம்: உத்தராடம் முன்னிரவு 7.39 வரை.

சுபநேரம்: 6.04 — 7.34

ராகுகாலம்: 10.34—12.04

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# ஆணவத்தையும் அதர்மத்தையும் அழித்து அருள்பொழிந்த முருகன்

## இன்று சூரசங்காரத் திருவிழா

முருகன் என்றால் அழகன் என்று பொருள். அந்த அழகனான முருகன் அவுணர்களை அழிப்பதற்கென்றே அகிலத்தில் உதித்தவன்.

அமரர்களையெல்லாம் சிறை வைத்து அட்டூழியங்கள் பல செய்த அசுரர்களான சூரபன்மன், சிங்கமுகன், தாரகாசுரன் ஆகியோரை அழித்தொழிக்க வேண்டுமென சிவபெருமான் கட்டளையிட்டார்.

சிவன் கொடுத்த வரம், சூரபன்மனாதியோருக்கு ஆணவத்தையும், மமதையையும் ஊட்டியது. ஆனாலும் கொடுத்தவனே பறிப்பது முறைமையன்று என எண்ணித் தன்னுடைய அம்சமாகவே ஆறுமுகப் பெருமானைத் தோற்றுவித்தருளினார்.


''ஆதலின் நமது சக்தி அறுமுகன்; அவனும் யாமும் பேதகமில்லோம்'' என்று சிவன் பகர்வதாகக் கச்சியப்பர் கந்த புராணத்தில் கூறுகிறார்

முருகப்பெருமான் யுத்தத்துக்கு ஆயத்தமானார். ஒரு சிறுவன் அதாவது பச்சிளம் பாலகன் தனக்கெதிராகப் போர் செய்ய வருகிறான் என்பதை அறிந்த சூரபன்மன் எள்ளிநகையாடினான். ''பால் மணம் மாறாப் பாலகனோடு நான் போரிடுவதா? சீ! வெட்கம்!!'' என்றுபொருமினான்.

யுத்த களத்தில் இருவரும் சந்தித்தனர். கருணை நிறைந்த முகத்தையுடைய கந்தப் பெருமானைக் கண்டான் சூரன்.

''மூண்டக மலர்ந்த தன்ன மூவிரு முகங்களோடு.....
தண்டையுஞ் சிலம்புமார்க்கும்
சரணமும் தெரியக்கண்ட''

சூரனுக்கு ஒரு கணம் மயக்கத்தை ஏற்படுத்தின. முருக



னின் திருப்பெருவடிவத்தைக் கண்டவன் உள்ளம் உருகினான் கண்ணீர் சொரிந்தான் அத்தனையும் மறந்து அவன் பாதத்தைப் பணிந்து சரண்புக ஆசைப்பட்டான்

### மனம் மாறவில்லை

ஆணவ மேலீட்டினால் அகங்காரம் தலையெடுக்கவே மனம்மாறிய சூரன் முருகனோடு போர் புரிந்தான் கடுஞ்சமர் நடந்தது இறுதியில் அருளே உருவான ஆறுமுகன் அவனை அழிக்காமல் அவனுடலை இருகூறாக்கி சேவலும் மயிலுமாக ஆக்கிக் கொண்டான்.

மமதையை அடக்கி மயிலாகவும் செருக்கை அடக்கிச் சேவலாகவும் மாற்றினார் முருகன்.

'கோலமா மஞ்ஞைதன்னில் குலவிய குமரன் தன்னைப் பாலன் என்றிருந்தேன்' என சூரன் வாயிலாகவே குமரப் பெருமானின் மகிமையை எடுத்தியம்புகின்றார் கச்சியப்பர்.

ஆணவமும் அகங்காரமும் மமதையும் செருக்கும் நீண்ட நாள்களுக்கு நிலைக்கமாட்டாதென்பதற்கு சூரபன்மன் வரலாறு ஓர் எடுத்துக் காட்டாகும்.

வாழ்க்கையில் நாம் எப்போதும் நேர்வழியிலேயே சம்பாதிக்கவேண்டும். நன்மைகள் பல செய்து, மற்றவர் மனம் புண்படாமல் பேசி, தியாகங்கள் புரிந்து, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழவேண்டும் என்பது கந்தபுராணம் கற்றுத் தரும் பாடம்.

நீர்க்குமிழிக்கு நிகரான இந்த உடம்பு அழியுந்தன்மையுடையது என்பதையுணர்ந்து தீமை செய்வதை விடுத்து நன்மைகளைச் செய்து ஆறுமுகப் பெருமானின் அருட்பெருங்கருணைக்குப் பாத்திரமாவோமாக. — இதன்

## அடிக்கல்

தாவடி இந்துக் கல்லூரியில் புதிய கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது

உடுவில் பிரதேச செயலாளரும், யாழ். மாவட்ட இந்து சமயப் பேரவையின் உபதலைவருமான ஆ. மகாலிங்கம் அடிக்கல்லை சம்பிரதாய பூர்வமாக நட்டார். (இ-30)

# முதலாம் ஆண்டின் நீங்காத நினைவலைகள்



மலர்வு 10 — 09 — 1930

உதிர்வு 02 — 11 — 1999

## அமரர் யோசவ் அருளானந்தம்

(இளைப்பாறிய மாநகரசபை நூலகர்)

விதியின் வழியினிலே நீங்கள்
விண்ணகம் சென்றாலும் - எம்
நெஞ்சின் நினைவுகளிலே
நீங்காது நிலைத்திடுவீர்!


தங்கள் ஆன்ம இளைப்பாற்றிற்காகப் பிரார்த்திக்கும்.

குடும்பத்தினர்.

பிடாரி கோயிலடி,
ஆனைக்கோட்டை.

(சி/13640)

# இரண்டாம் ஆண்டு நீங்காத நினைவஞ்சலி



## அமரர் சின்னப்பு செல்லையா

(உரிமையாளர், வதனா வெல்டிங் வேக்ஸ்)

மண்ணில் 06-06-1928

விண்ணில் 16-10-1998

திதி: 02 - 11 - 2000

ஈராண்டு என்ன 200 ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் என்றும் உங்கள் நினைவு மாறாது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

173/10, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.

(80115)

# தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம். நவ. 2

பருத்தித்துறைக்கு நேற்று வந்து சேர்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கப்பலில் வெளியூர்த் தபால்கள் அடங்கிய 407 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டன.

இதே கப்பலில் குடா நாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 54 தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டதாக யாழ். பிரதம தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ — ரி)

# செய்முறைப் பரீட்சைகள்

வண்ணார்பண்ணை, நவ. 2

இதுவரை ஜி சி ஈ. சாதாரணதரம் 2000 ஆண்டு நடனம், சங்கீதம், மனைப்பொருளியல், விவசாயம், உடற்கல்வி ஆகிய பாடங்களின் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றாத கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம், கைதடி விக்கினேஸ்வர வித்தியாலயம், கைதடி குருசாமி வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களுக்கு எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை செயல்முறைப் பரீட்சை நடைபெறவுள்ளது.

மாணவர்களை சுன்னாகம் இராமநாதன் கல்லூரிக்கு செய்முறைக்குத் தேவையான பொருள்களுடன் அன்று காலை 9 மணிக்கு சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது,

(இ-74)

# உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 2

திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கத்தினால் நடத்தப்படும் அழைக்கப்பட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் கால். இறுதி ஆட்டங்கள் இன்று பிற்பகல் 4 மணி முதல் இடம்பெறவுள்ளன.

இந்த ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:

★ சென். மேரிஸ் வி. க, எதிர் யாழ் சிற்றி வி. க.

★ ஒலிம்பிக் வி க. எதிர் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம். (இ-3)

# பாராட்டு விழா

பருத்தித்துறை, நவ. 2

வடமராட்சிப் பகுதியிலுள்ள பாடசாலைகளில் இருந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி அடைந்தவர்களுக்கான பாராட்டு விழாவும் பரிசில் வழங்கும் நிகழ்வும் எதிர்வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2 30 மணிக்கு வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியில் ஞானியார் கல்வி நிறுவனத் தலைவர் எஸ் நவரத்தினராஜா தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி கலந்து கொண்டு பரிசில்கள் வழங்குவார். எம்.எஸ் எவ். மருத்துவக் குழுவின் வதிவிடப் பிரதிநிதி சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(இ-118)


# G.A.Q., 1ST IN COM.

## யாழ். பேராதனை (வெளிவாரி) பல்கலைக்கழகம்

★ A/L இல் 3 பாடங்கள் (கணித, விஞ்ஞான, கலை, வர்த்தகம்) சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் இந்தப் பட்டப் பாட நெறிக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

★ இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பம்: 04 - 11 - 2000 காலை 8 மணி

★ பல்கலைக்கழக பதிவுகள், பாட நேர அட்டவணைகள் தொடர்பான சகல விவரங்களையும் நேரில் பெற்றுக் கொள்ளவும்.

விவரங்களுக்கு: S. அருள்நங்கை

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி, - யாழ். (80109)


# முக்கிய அறிவித்தல்

2000 ஆம் ஆண்டு அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் இடையிலான விளையாட்டுப் போட்டியில் பங்கு பற்றிய மாணவர்கள் அனைவரும் தங்களது கப்பல் பயணச் சிட்டுக்களை (சென்று, வந்த இரண்டும்) உடற்கல்வி அலகில் 06—11— 2K (திங்கள்) 12 மணிக்கு முன் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்,
விளையாட்டு அவை,
யாழ். பல்கலைக்கழகம்.

(80117)

# மரண அறிவித்தல்கள்

## முருகப்பர் சிதம்பரப்பிள்ளை

புளியங்கூடல்

(முன்னாள் இ. போ ச. நடத்துநர்)

புளியங்கூடல் ஊர்காவற்றுறையைச் சொந்த முகவரியாகக் கொண்ட முருகப்பர் சிதப்பரப்பிள்ளை அவர்கள் 1-11-2000 நேற்று சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற முருகப்பர்-தங்கமுத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சற்குணம், வசந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா, கணபதிப்பிள்ளை, நாகமணி, ஐயாத்துரை, மாணிக்கம், பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ் சென்றவர்களான மனோன்மணி. கனகம்மா, சிதப்பரப்பிள்ளை, பொன்னுச்சாமி மற்றும் நாகம்மா. யோகவதி ஆகியோரின் மைத்துனரும், ஐங்கரன் (நோர்வே), அகிலா, அலன், அருணன், அபிசன் ஆகியோரின் பேரனும், திருமதி கதிரவேலு அன்னலட்சுமி (வவுனியா) அவர்களின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (2-11-2000) வியாழக்கிழமை மு. ப. 10 மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் குடும்பமயானத்திற்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுடன் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்:
மகன்: சற்குணம்
(உரிமையாளர்: அகிலா தொலைத் தொடர்பு நிலையம்,
புளியங்கூடல் சந்தி.)

புளியங்கூடல் சந்தி.
ஊர்காவற்றுறை.

(80104)

## கே. சிவஞானம்

(ஓய்வு பெற்ற வருமானவரி அதிகாரி, யாழ்.)

புலோலியைச் சேர்ந்த கே. சிவஞானம் (ஓய்வு பெற்ற வருமானவரி அதிகாரி) நேற்று முன்தினம் 31—10—2000 அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் கணவரும், உமா பார்த்திபன் (பொஸ்வானா), சறோஜினி ஆகியோரின் தகப்பனாரும், இராஜேந்திரா (தொழில்நுட்ப உத்தியோகத்தர், கரவெட்டி பிரதேச சபை), சறோஜினி (பொஸ்வானா), துரைராஜா (கனடா) ஆகியோரின் மாமனாரும், அபிராமி (பருத்தித்துறை மெ பெ. உ/பாடசாலை A/L 2002 மாணவி), கணேஸ்வரன், பிரசாத், கார்த்திகேயன், பிரணவன் (பொஸ்வானா) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
து. சறோஜினி (மகள்).

சூசையப்பர் கோயிலடி,
புலோலி கிழக்கு.

(80100)

## யேசுதாசன் அரியறட்ணம்

(முன்னாள் இ. போ. ச. உத்தியோகத்தர்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், சில்லாலையை வசிப்பிடமாகவும் இடம்பெயர்ந்து 27/17, புங்கன்குளம் வீதி, பாண்டியன்தாழ்வில் வசித்தவருமானயேசுதாசன் அரியறட்ணம் [முன்னாள் இ போ.ச.உத்தியோகத்தர்] நேற்று[01-11-2000]புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேனாட்- கிறிஸ்ரினா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற றேமன் கிறிஸ்தோப்பர் (முன்னாள் இறப்புப் பிறப்புப் பதிவாளர்-வலி மேற்கு)- பொலினம்மாவின் அன்பு மருமகனும், சலாக்கினியின் அன்புக் கணவரும், சுதந்திரராஜ் (பிரான்ஸ்), சுஜாதா (சுஜி- முன்பள்ளி ஆசிரியை, கொழும்புத்துறை), சுறேந்திரராஜ்- (சுறேன்- கொழும்பு – உரிமையாளர், இம்பக் எக்ஸ்பிரஸ்), சுபாஷினி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சறோகினி, அன்ரன், மதுரநாயகம் (டோகா), விஜயன், வின்சற் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சூசைப்பிள்ளை, செல்வரட்னம், றிஷா, புஸ்பம் (லண்டன்), பங்கிராஸ் ஜெயரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், C R ஜோசப், C R சேவியர், C R சலேசியஸ் ஆகியோரின் மைத்துனருமாவார்

அன்னாரின் பூதவுடல் இன்று [2 – 11 - 2000] வியாழக்கிழமை 175, குருசோ வீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு முற்பகல் 11.00 மணிக்கு பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி.

175, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்

(80113)

NSB
உங்கள் குடும்ப வங்கி

பணத்தைச் சேமித்துப் பரிசுகளையும் வெல்லுங்கள்

# தேசிய சேமிப்பு வங்கி



## பரிசூதிய சேமிப்புச் சான்றிதழ் (ரிதிரேகா)

1. ஒருமுறை ரிதிரேகா சான்றிதழ்களைக் கொள்வனவு செய்தால் ஆயுட்காலம்வரை (சான்றிதழைப் பணமாக மாற்றும்வரை) பரிசுகளை வெல்லும் வாய்ப்பு உண்டு.
2. அதிக பரிசுகளைப்பெற மேலும் ரிதிரேகா சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யுங்கள்.

**28.10.2000 இல் நடைபெற்ற பரிசூதிய சேமிப்பு சான்றிதழ்களின் 21 ஆவது சீட்டிழுப்பில் தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணம் கிளையில் பரிசுபெற்ற 139 அதிர்ஷ்டசாலிகளின் விவரம்:-**

இரண்டாம் பரிசு முச்சக்கர வாகனம் (ஆட்டோ)

| | | | | |
|---|---|---|---|---|
| 128 | 12C | 0626 | செல்வி யதுசா சண்முகாநந்தன் | உடுவில் கிழக்கு |

மூன்றாம் பரிசு தங்கநாணயம்

| | | | | |
|---|---|---|---|---|
| 071 | 04E | 0791 | திரு. ரி. நாதபிரமம் | ஆனைக்கோட்டை |
| 031 | 12S | 0307 | திரு. எஸ். யோகீஸ்வரக்குருக்கள் | அத்தியடி |

நான்காம் பரிசு ரூபா 1,000:-

| | | | | |
|---|---|---|---|---|
| 072 | 09A | 0882 | திரு. எம். விசாகன் | சுன்னாகம் |
| 020 | 10F | 0172 | திரு. எஸ். சிவகுமார் | இணுவில் |
| 063 | 13P | 0774 | திருமதி எம். ரி. ஜீ விமலதாஸ் | யாழ்ப்பாணம் |
| 008 | 14B | 0324 | திருமதி வி. கிரிதாகரன் | கோப்பாய் |
| 033 | 12S | 0317 | திரு. என் முகுந்தன் | அளவெட்டி |
| 155 | 12O | 0189 | திரு. ஜே. சிவராசா | மானிப்பாய் |
| 052 | 12S | 0543 | திரு எம். துரைராஜா | புத்தூர் |
| 097 | 14B | 0338 | திரு. எஸ். சுந்தரலிங்கம் | கொழும்பு |
| 069 | 13S | 0595 | திரு. ஆர். மன்மதராசன் | திருநெல்வேலி |
| 045 | 12P | 0948 | எம். என். மரியதாசன் | யாழ்ப்பாணம் |
| 112 | 14F | 0813 | செல்வன் பி. கயந்தன் | கோண்டாவில் |
| 059 | 04E | 0265 | திருமதி ஏ. குலசபாநாதன் | கந்தர்மடம் |
| 029 | 04V | 0847 | திருமதி என். பாக்கியம் | நல்லூர் |
| 096 | 12D | 0683 | செல்வன் கே. திருமுருகன் | யாழ்ப்பாணம் |
| 089 | 14B | 0637 | செல்வன் கே. சாய்சங்கர் | யாழ்ப்பாணம் |
| 148 | 12C | 0214 | செல்வன் என் விதுசன் | யாழ்ப்பாணம் |
| 125 | 03S | 0349 | திரு. யு. ஜீ. பி. தனபாலா | குருநகர் |
| 079 | 14B | 0586 | திரு. எஸ். சுதர்சன் | நல்லூர் |
| 040 | 04E | 0635 | திரு. கே. வரதராஜலிங்கம் | மானிப்பாய் |
| 080 | 13B | 0581 | செல்வன் ஜெ. ஜெ. ஜெயேந்திரா | சண்டுக்குளி |
| 113 | 15Y | 0728 | திரு. வி. சுப்பிரமணியம் | வட்டுக்கோட்டை |
| 027 | 14B | 0287 | செல்வி எ. றோகினிவதனி | யாழ்ப்பாணம் |
| 109 | 12D | 0280 | திரு. பி. தனபாலன் | கோண்டாவில் |
| 132 | 13N | 0061 | திரு. ஜெ. சச்சிதானந்தம் | கொக்குவில் |
| 099 | 12D | 0210 | திருமதி யு. தனபாலசிங்கம் | ஓட்டுமடம் |
| 055 | 02R | 0236 | திரு. எஸ். சேரன் | உரும்பிராய் |
| 001 | 13O | 0671 | திரு. பி. சிவனேசன் | காரைநகர் |

ஐந்தாம் பரிசு ரூபா 500/-

| | | | | |
|---|---|---|---|---|
| 124 | 13N | 0708 | திரு. எஸ். நகுலேந்திரன் | கொடிகாமம் |
| 135 | 12O | 0034 | Dr. ஜி. கேதீஸ்வரநாதன் | உடுப்பிட்டி |
| 092 | 09A | 0077 | திருமதி வி. வேல்நிதி | கோப்பாய் |
| 024 | 12S | 0185 | திரு. எஸ். சற்குணம் | கோண்டாவில் |
| 017 | 09O | 0899 | திரு. எஸ். செல்வதேவி | யாழ்ப்பாணம் |
| 137 | 14E | 0257 | திருமதி எஸ் இராமச்சந்திரன் | ஆனைக்கோட்டை |
| 073 | 14E | 0633 | திரு. பி. தேவராசலிங்கம் | கொக்குவில் |
| 101 | 12O | 0822 | திரு. ரி. நவரட்ணம் | கட்டப்பிராய் |
| 044 | 04E | 0387 | திரு. ரி. மாரீஸ்வரன் | யாழ்ப்பாணம் |
| 094 | 10F | 0025 | செல்வி ஸ்ரீசாயிஜனனி | வண்ணார்பண்ணை |
| 034 | 14D | 0575 | திரு. எஸ். கந்தசாமி | புத்தூர் |
| 139 | 13N | 0521 | திரு. ஜெ. சச்சிதானந்தம் | கொக்குவில் |
| 029 | 10F | 0911 | திரு. ஆர் நடராஜகுமார் | கொக்குவில் |
| 097 | 14B | 0849 | ஆர். புஸ்பராதா | சாவகச்சேரி [illegible] |
| 058 | 02R | 0803 | செல்வன் என் றீரோஸ் | சுன்னாகம் |
| 117 | 03S | 0832 | செல்வி எஸ். அகிலா | சித்தன்கேணி |
| 044 | 04E | 0900 | திரு. ஆர். பாலகிருஷ்ணன் | கொக்குவில் |
| 036 | 09X | 0339 | திரு. எஸ். தனபாலசிங்கம் | திருநெல்வேலி |
| 025 | 13H | 0232 | ஆர். பி. சரஸ்வதி | சுன்னாகம் |
| 011 | 14B | 0780 | என். தமயந்தி | சங்கானை |
| 125 | 09N | 0639 | திரு. ஆர். பாஸ்கரலிங்கம் | சுன்னாகம் |
| 053 | 09X | 0671 | திரு. ரி. சிகங்காதர ஐயர் | புன்னாலைக்கட்டுவன் |
| 060 | 13P | 0273 | திரு. பி. தயாபரன் | பண்டத்தரிப்பு |
| 002 | 13O | 0151 | திரு. பி. சிவநேசன் | காரைநகர் |
| 093 | 13A | 0561 | திருமதி எஸ் பாலகுமார் | வண்ணார்பண்ணை |
| 064 | 04E | 0866 | திரு. ரி. மகேந்திரன் | வட்டுக்கோட்டை |
| 139 | 13 | 0522 | திரு. ஜே. சச்சிதானந்தம் | கொக்குவில் |
| 027 | 09X | 0326 | திரு. வி. மகாலிங்கம் | நல்லூர் |
| 010 | 10F | 0229 | திரு. வி. பாலகிருஸ்ணன் | யாழ்ப்பாணம் |
| 150 | 13B | 0306 | திருமதி வி. நாலலக்ஸ்மி | வண்ணார்பண்ணை |
| 134 | 03S | 0770 | திரு. வி. உதயகுமார் | சாவகச்சேரி |
| 035 | 13P | 0576 | திரு. வி. மகாலிங்கம் | திருநெல்வேலி |
| 082 | 13P | 0719 | செல்வன் ரி. குவாரகன் | அரியாலை |
| 148 | 12C | 0722 | செல்வன் என். விதுசன் | யாழ்ப்பாணம் |
| 068 | 07N | 0907 | திருமதி கே. சுசீலாதேவி | சாவகச்சேரி |
| 153 | 12C | 0227 | செல்வி. காயத்திரி ஆத்மநாதன் | மானிப்பாய் |
| 100 | 09A | 0834 | எஸ். ரேவதி | யாழ்ப்பாணம் |
| 139 | 03S | 0977 | திரு. பி. குவராசா | கொழும்புத்துறை |
| 074 | 04E | 0214 | ரி. பத்மினி | யாழ்ப்பாணம் |
| 151 | 07W | 0325 | செல்வன் கே. பிரசாந்தன் | காரைநகர் |
| 107 | 13A | 0841 | திருமதி என். விக்கினேஸ்வரன் | யாழ்ப்பாணம் |
| 115 | 15V | 0989 | திரு. எஸ். சோதிலிங்கம் | நாவற்குழி |
| 085 | 10C | 0162 | திரு. எஸ். சண்முகசுந்தரம் | யாழ்ப்பாணம் |
| 060 | 14B | 0707 | திரு. வி. பி. வேலுப்பிள்ளை | கந்தர்மடம் |
| 035 | 13B | 0112 | திருமதி ரி. கணேசலிங்கம் | கொக்குவில் |
| 084 | 09A | 0925 | பி. சாளினி | யாழ்ப்பாணம் |
| 006 | 13O | 0586 | எஸ். சரவணபவன் | திருநெல்வேலி |
| 031 | 04V | 0449 | செல்வி ஜெ. முதர்சனா | கந்தர்மடம் |
| 143 | 13G | 0683 | பி. சதாசிவம் | அரியாலை |
| 005 | 13O | 0047 | திரு. பாலசுப்பிரமணியம் | அராலி |
| 056 | 12P | 1000 | ரி. செரீனா | ஆனைக்கோட்டை |
| 110 | 14E | 0833 | திரு. கே. வசந்தகுமார் | மானிப்பாய் |
| 124 | 15V | 0604 | திருமதி எஸ். மனோரதி | கந்தர்மடம் |
| 016 | 12S | 0478 | திருமதி ஜெ. உதயகுமார் | கோப்பாய் |
| 095 | 09A | 0913 | திரு. கே. பாலசுப்பிரமணியம் | யாழ்ப்பாணம் |
| 127 | 13G | 0755 | செல்வி எஸ். ஆர். நக்வி | யாழ்ப்பாணம் |
| 098 | 12C | 0707 | திருமதி எஸ். புஸ்பலீலா | யாழ்ப்பாணம் |
| 156 | 13N | 0031 | திரு. சி. சி. அருமைநாயகம் | கோப்பாய் |
| 153 | 12O | 0855 | பி. பாலச்சந்திரன் | சங்கானை |
| 095 | 02J | 0508 | ஆர். நர்சிகா | யாழ்ப்பாணம் |
| 033 | 04V | 0929 | ஈ. உமாகாந்தன் | நல்லூர் |
| 046 | 10C | 0252 | திரு. வி. வீரசிங்கம் | காரைநகர் |
| 049 | 04E | 0279 | எஸ். பரமசிவம் | கோண்டாவில் |
| 150 | 13O | 0436 | எம். பி. மங்கஸ்மியன் | குருநகர் |
| 077 | 07N | 0691 | பி. தியாகராஜா | மானிப்பாய் |
| 039 | 10C | 0675 | எம். சுதந்திரன் | உடுப்பிட்டி |
| 044 | 10C | 0587 | எஸ். கலைச்செல்வி | அரியாலை |
| 134 | 14C | 0581 | திரு. ஜெ. பத்மகுமார் | யாழ்ப்பாணம் |
| 017 | 13B | 0303 | திரு. எஸ். சுதாகரன் | நல்லூர் |

ஆறாவது பரிசு ரூபா 250/- பெறுமதியான பரிசுக்கூப்பன்

| | | | | |
|---|---|---|---|---|
| 039 | 13P | 0408 | ரி. நந்தினி | நாவடி |
| 005 | 09O | 0852 | எஸ். திருச்செல்வராஜன் | யாழ்ப்பாணம் |
| 028 | 12P | 0202 | திரு. பி. யசிதரன் | இணுவில் |
| 109 | 13B | 0244 | செல்வி என். ரேணுகா | அச்சுவேலி |
| 083 | 15V | 0966 | செல்வி ஆர். ரேணுகா | நல்லூர் |
| 036 | 04V | 0283 | எஸ். பாரதி | கோப்பாய் |
| 003 | 09O | 0576 | திரு. எஸ். திருச்செல்வராஜன் | யாழ்ப்பாணம் |
| 124 | 14E | 0650 | செல்வன் வி. அபிலக்ஷன் | யாழ்ப்பாணம் |
| 062 | 07N | 0170 | செல்வன் ரி. சாருஜன் | அச்சுவேலி |
| 008 | 13B | 0228 | திரு. ரி. நடராஜா | கொக்குவில் |
| 042 | 14B | 0930 | திரு. கே. தர்சன் | யாழ்ப்பாணம் |
| 086 | 14E | 0406 | எஸ். சிவரஞ்சினி | வேரணி |
| 059 | 07N | 0960 | திரு. எஸ். மகேந்திரன் | கொக்குவில் |
| 116 | 09N | 0958 | எஸ். சாரதா | நல்லூர் |
| 108 | 13N | 0101 | ஆர். துசாந்தி | ஆனைக்கோட்டை |
| 003 | 14F | 0744 | கே. ஸ்ரீரஞ்சனி | சுளிபுரம் [illegible] |
| 055 | 13S | 0939 | கே. கிருஷ்ணகுமாரி [illegible] | தெல்லிப்பளை [illegible] |
| 096 | 14E | 0749 | ஆர். துசாந்தினி | மாதகல் |
| 108 | 09N | 0674 | திருமதி எம். எம். சிவராசன் | அரியாலை |
| 073 | 14B | 0512 | செல்வன் எஸ். ரட்ணசிங்கம் | அச்சுவேலி |
| 049 | 10C | 0535 | திரு. எம். பழமப்பன் | நல்லூர் |
| 046 | 09X | 0993 | எஸ். ரங்கநாதன் | சாங்கானை |
| 029 | 12P | 0622 | திருமதி கே. இராஜேஸ்வரன் | கோண்டாவில் |
| 002 | 13P | 0862 | ரி. தருமதேவி | சுழிபுரம் |
| 010 | 07X | 0825 | ரி. சரவணசிவா | கரவெட்டி |
| 091 | 12C | 0072 | எஸ். நந்தகோபால் | கந்தர்மடம் |
| 044 | 04V | 0517 | திருமதி கே. இராஜேஸ்வரன் | கோண்டாவில் |
| 127 | 15V | 0072 | திருமதி எஸ். ஸ்ரீசந்திரராஜா | திருநெல்வேலி |
| 040 | 12P | 0213 | திரு. எஸ். வெற்றிவேலாயுதம் | யாழ்ப்பாணம் |
| 024 | 14B | 0290 | ரி. சங்கீதா | அச்சுவேலி |
| 102 | 13A | 0459 | ஜெ. பவதாரணி | கோப்பாய் |
| 099 | 08V | 0535 | திரு. க. தவநாதன் [illegible] | யாழ்ப்பாணம் |
| 001 | 14F | 0682 | செல்வி த. சிவகணேசலிங்கம் | சித்தன்கேணி |
| 152 | 13G | 0206 | திரு. எ. நாகராஜா | கொடிகாமம் |
| 025 | 13H | 0407 | ஆர். பி. சரஸ்வதி | சுன்னாகம் |
| 035 | 10C | 0324 | என். கபிலன் | கோப்பாய் |
| 047 | 02R | 0205 | செல்வன் எஸ். செந்தூரன் | உரும்பிராய் |
| 031 | 04V | 0827 | என். மகேஸ்வரி | நாரந்தனை |
| 022 | 13P | 0622 | ஆர். அந்தோனி | குருநகர் |
| 125 | 12O | 0110 | திரு. கே. வேலானந்தபிள்ளை | நீர்வேலி |

"அதிக பரிசுகளைப்பெற மேலும் ரிதிரேகா சான்றிதழ்களை கொள்வனவு செய்யுங்கள்"

(C/23637)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

பொன்னுச்சாமி வசீகரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (இல.562190740v), விசேட அடையாள அட்டை (இல.090202431) என்பன பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் வரும்போது தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். இல.11, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (80095)

இராஜவீதி, கிறேசர் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு எனும் முகவரியைச் சேர்ந்த சந்திரதாஸ் சாந்தரூபி என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.795082506v)யும், விசேட அடையாள அட்டை (இல. 0903006877) என்பன 25-10-2000 அன்று யாழ்.நகருக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் அல்லது இளநிலா தையலகம், இருபாலைச் சந்தி எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (80099)

தவத்துரசா் தவசிரோஷன் என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.812843559v), விசேட அடையாள அட்டை (இல.091046901) என்பன வல்லைவெளிக்கும் நெல்லியடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து நெல்லியடியிலுள்ள வதனி ஜீவல்லறியில் அல்லது நெல்லைக்குமரன் எனும் கடையில் ஒப்படைத்து உதவவும். எடுத்தவர்கள் மனிதாபிமான அடிப்படையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (80077)

## விற்பனைக்கு

கமரா (Cannon-Eos, Zoom Lens), நீர் இறைக்கும் இயந்திரம் (Kubota-Robin), தளபாடங்கள (Show Case, Dressing Table), மோட்டர் (1.5 HP, 1HP, 1/2 HP) தொடர்பு: பொ.யோகநாதன், கரணவாய் மேற்கு, கரவெட்டி (மண்டான் தபாற்கந்தோருக்கு எதிரில்) (80070)

## தேவை

ரெலிபோன் Booth Box தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல. 1127, மே/பா உதயன். (80060)

## TWO HOUSES FOR SALE

3 Rooms House at Temple Road, Nallur, 4 Rooms House at Manatharai Lane, Kandarmadam. No Brokers, Real Buyers Only. Contact :-Rasa Vamadevan, 180, Point Pedro Road, Jaffna. T.P. - 021-3239 (80101)

## தவறிவிட்டது

குப்பிளான வடக்கு, சமாதி கோயிலடி என்னும் முகவரியைச் சேர்ந்த பொன்னம்பலம் குகதாசா என்பவரது தேசிய அடையாளஅட்டை (722091035v), விசேட அடையாள அட்டை (0906029017) இரண்டும் 26-10-2000 அன்று மயிலங்காட்டில தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து விக்கினேஸ்வரா வித்தியாசாலையடி, குப்பிளான் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (80084)

# கல்முனையில் 50 பேர் கைதாகி விடுவிப்பு

அம்பாறை,நவ.2

பண்டாரவளை தடுப்பு முகாம சம்பவத்தைக் கண்டித்து கடந்த திங்கட்கிழமை கடைகளைப் பூட்டிய கல்முனையிலுள்ள தமிழ் வர்த்தகர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 50 பேர் விசேட அதிரடிப்படையினரால்கைது செய்யப்பட்டனர்.

இந்த ஹர்த்தாலின் பின்னர் நேற்று முன்தினம் காலை7 மணிக்கு தமது கடைகளை வர்த்தகர்கள் திறந்து கொண்டிருந்த பொழுது திடீரென வாகனங்களிலவந்து இறங்கிய அதிரடிப்படையினா கடைகளை மூடச் செய்து அங்கு நின்றவாகளை கைது செய்து அழைத்துச் சென்றனர்.

காரைதீவு விசேட அதிரடிப்படை முகாமுக்கு கொண்டு செல்லப்பட்ட இவர்கள் விசாரணைகளையடுத்து அன்று பகல் 12 மணிக்குப் பின்னர் விடுவிக்கப்பட்டனர். (இ-5-14)

# ரயில் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம்

பண்டாரவளைத் தடுப்பு முகாம் படுகொலைகளைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையம முன்பாக நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

பல்வேறு மனித உரிமைகள் அமைப்புக்கள் மற்றும் சிங்கள - தமிழ் அரசியல் கட்சிகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

விந்துனுவெவப் படுகொலைச் சம்பவத்தை உடனடியாக விசாரித்து சூத்திரதாரிகளுக்கு தண்டனை வழங்குமாறு இந்த ஆர்ப்பாட்டத்தில் கோஷம் எழுப்பப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்னவும் கலந்து கொண்டிருந்தார். (இ-8-20)

# பொலிஸாரின் விடுமுறை ரத்து

மலையகத்தில் கடந்த சில நாள்களாக நிலவிவரும் அசம்பாவிதங்கள் காரணமாக நாடு முழுவதும் பொலிஸாரின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்று பதில் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ. ஆனந்தராஜா தெரிவித்தார். (இ)

---

புவியியலாளன் இதழ் (12-13)

# நூல் வெளியீட்டு விழா

காலம்: நாளை (03-11-2000) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணி.

இடம்: புவியியல் மண்டபம் - II

ஆர்வமுள்ள அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

புவியியற் கழகம்
யாழ். பல்கலைக்கழகம்.

(c/13652)

---

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17 - 04 - 1981

உதிர்வு 02 - 11 - 1999

## செல்வி ஆறுமுகம் சியாமளா

(A/L 2000 கலைப்பிரிவு மாணவி)

ஊரெல்லாம் உன்பேர் விளங்க
பாரினிலே படித்து கலைத்துறையில்
கரைகாண்பாய் என்றிருந்தோம்
நீருள்ளே போயுந்தன் வாழ்க்கை
நிழலாச்சு-உறவுகளைத் தேற்றுவதற்கு
ஆர் உள்ளார் சியாமளாவே!
பார் - இங்கே உந்தன்
பாசமுள்ள உறவுகளின்
பரிதவிப்பு தெரியலையா?

உன் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

கொம்பாவோடை,
களபூமி,
காரைநகர்.

(80628)

---

# நெஞ்சம் சுமக்கும் ஓராண்டு நினைவலைகள்



பிறப்பு 23 - 03 - 1932

இறப்பு 02 - 11 - 1999

## அமரர் சாமிநாதர் ஜேசுதாசன்

"சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

சகோதரி
செலஸ்ரினா சாமிநாதர்

41, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

(80068)

---

# 90 ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு 01 - 10 - 1937

உதிர்வு 05 - 08 - 2000

அமரர்

## சங்கரப்பிள்ளை சரவணமுத்து

பாசத்தின் திருவுருவாய் பண்பின் உறைவிடமாய்
எமக்கெல்லாம் வழிகாட்டியாய் இருந்த அப்பாவே!
கடைசி நேரக் கிரியையைக் காணக்கூட முடியவில்லை
கதறி அழுகின்றோம் கண்ணீர் துடைக்க நீங்கள்
இல்லையே!

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.


நிரந்தர முகவரி:
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

தற்காலிக முகவரி:
ஈஸ்வரி இல்லம்,
நெல்லியடி.

(80031)

---

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## செல்வன் புஸ்பராசா சிவரூபன்

(யா/வல்வை சிவகுரு வித்தியாசாலை மாணவன்)

2000 ஆம் ஆண்டின் 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்திலேயே அதிகூடிய புள்ளிகள் (162 புள்ளிகள்) பெற்று முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டு யா/வல்வை சிவகுரு வித்தியாசாலைக்கும் பெற்றோருக்கும் எமது ஊராகிய ஆதிகோவிலடிக்கும் பெருமை தேடித் தந்ததையிட்டு அவரை மனமார வாழ்த்துகின்றோம்.

* ஆதிகோயில் பரிபாலனசபை, * ஆதிசக்தி கடற்றொழிலாளர் சங்கம்
* ஆதிசக்தி விளையாட்டுக்கழகம், * ஆதிசக்தி படிப்பகம்,
* ஆதிசக்தி சிக்கன கடன்வழங்கு கூட்டுறவுச் சங்கம்.

வல்வெட்டித்துறை.

(80097)

# கரவெட்டி இளம் பெண்ணின் மரணம் கொலை எனத் தீர்ப்பு

நெல்லியடி,நவ.2

கடந்த திங்கட்கிழமை மாலை கரவெட்டி தச்சன்தோப்புப் பகுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களினால் வெட்டப்பட்டு மரணமான இதே இடத்தைச் சேர்ந்த சுதாகரன்-செல்வராணி(வயது29) என்பவரின் மரணம் கொலை எனத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

நெல்லியடிப் பொலீஸாரினால் அன்றிரவு மந்திகை மருத்துவமனைச் சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்ட இந்தச் சடலத்தின் பிரேதபரிசோதனையை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.கதிரவேற்பிள்ளை மேற்கொண்டார்.

மரணவிசாரணையை பருத்தித்துறைமாவட்ட பதில்நீதிவான் ஏ.கே. நடராஜா நடத்தினார். மரணவிசாரணையின் பின் கொலை எனத் தீர்ப்பளித்து, சடலத்தை புதைக்குமாறு பணித்து அவரது தாயாரிடம் சடலத்தை ஒப்படைக்க உத்தரவிட்டார்.

மரணவிசாரணையின்போது இறந்தவரின் தாயாரும் மகள் கீர்த்தனாவும் சினேகிதப்பெண் ஒருவரும் சாட்சியமளித்தனர். நெல்லியடிப் பொலீஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் எஸ்.சமரநாயக்காவும், கரவெட்டி மத்தி கிராம சேவை அலுவலர் ரீ.சுந்தரபாரதியும் சாட்சிகளை நெறிப்படுத்தினர்.

இம்மரணம் சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை செய்தபின் அறிக்கையை பருத்தித்துறை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு பதில் நீதிவான் நெல்லியடி பொலீஸ்நிலைய குற்றத் தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரியைப் பணித்தார்.

செல்வராணியின் மரண விசாரணையின்போது சாட்சியமளித்த அவரின் மகளான சுதாகரன் கீர்த்தனா (வயது10) கூறியதாவது:-

நாங்கள் வீதியால் சென்றபோது மாலைநேரம் இருக்கும். அப்போது வீதியில் ஒரு சைக்கிள் விழும் சத்தம் கேட்டது. நான்திரும்பிப் பார்த்த போது இளைஞன் ஒருவன் அம்மாவின் தலைமயிரை இறுகப்பிடித்தபடி அவரின் கழுத்தை ஓங்கி வெட்டுவதைக் கண்டேன். அம்மாவை வெட்டிக் கொலை செய்தவரை, நான் நேரில் கண்டால் அடையாளம் காட்ட முடியும் - என்றார்.

கடந்த தீபாவளித் தினத்தன்று கரவெட்டிப்பகுதியில் சந்தைக் குத்தகைக்காரரான க.தவராசா என்பவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரது மரணம் தொடர்பாக செல்வராணியின் கணவன் சுதாகரன் சந்தேகத்தின் பேரில் பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர் தற்பொழுது விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அவரது மனைவியே தற்போது கொலை செய்யப்பட்டுள்ளார். இவர் இரு பிள்ளைகளின் இளம்தாய் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-109-31)

# சத்தம் கேட்டு அறைக்குள் பார்த்த போது நிமலராஜன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்

## மரண விசாரணையில் தாயார் சாட்சியம்

யாழ்ப்பாணம்,நவ.2

எனது கணவரின் சத்தத்தைக் கேட்டு வீட்டுக்குள் ஓடிச்சென்று மகனின் அறையை எட்டிப்பார்த்தேன் அப்பொழுது எனது மகன் நிமலராஜன் இரத்த வெள்ளத்தில் கிடந்தார்.

இவ்வாறு நிமலராஜனின் தாயார் திருமதி ம.லில்லி திரேசா(வயது 59) நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் இடம்பெற்ற மரண விசாரனையின் போது கண்ணீர் மல்க தெரிவித்தார்.

யாழ்.நீதிமன்றநீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் நடைபெற்ற மரண விசாரனையின் போது அவர் மேலும் கூறியதாவது:-

சம்பவதினம் இரவு 9.30 மணியளவில் எனது கணவர் வானொலியில் செய்தி கேட்டுக்கொண்டிருந்தார். அடுத்த அறையில் மகன் நிமலராஜன் செய்திகள் எழுதிக்கொண்டிருந்தார்.

இன்னொரு அறையில் மகனின் மனைவி குழந்தைகளை நித்திரையாக்கிக் கொண்டிருந்தார். நான் மலசல கூடத்தில் இருந்தேன்.

மலசலகூடத்தில் இருந்து நான் வெளியே வந்தபொழுது பெரிய வெளிச் சத்துடனும்ஒருநாளும் கேட்காத சத்தத்துடனும் ஏதோ ஒரு பொருள் வீட்டுக்குள் விழுவதை உணர்ந்தேன். வீடெங்கும் புகைமண்டலமாகஇருந்தது. கணவர் 'வெட்டுறாங்கள்.... வெட்டுறாங்கள்' என்று ஓலமிட்டுக் கொண்டிருந்தார்.

நான் கதவைத்திறந்து கொண்டு உள்ளே ஓடிவந்த பொழுது ஏதோ ஒரு பொருள் என்மீது பட்டு நான் கீழே விழுந்தேன். அப்போது எனது கணவரும் பேரனும் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டனர்.

மகனும் அறையில் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டார். எனது முகம், கைகளில் இரத்தம் காணப்பட்டது. எனது பல் உடைந்திருந்ததுடன் வயிற்றிலும் காலிலும் காயம் ஏற்பட்டது.

'ஐயோ! எங்களை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போங்கோ' என்று கத்தினேன் அப்பொழுது மின்சாரம் இல்லாமலிருந்தது. மின்சாரம் வந்ததும் அயலவர்கள் வந்தனர்.

எமது வீட்டுக்கு அருகிலுள்ள கிராமசேவையாளர் மற்றும் எமது மருமகன் ஆகியோர் வான்ட்மாஸ்டரில் எங்களை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றனர்.

நான் மலசலகூடம் செல்லும் போதும் திரும்பும் போதும் மின்சாரம் இல்லாமல் இருந்தது.சம்பவம் நடந்த அன்று வீட்டில் எங்கள் குடும்பத்தைத் தவிர வேறு எவரையும் நான் காணவில்லை.

மகன், மருமகள், பிள்ளைகள் இருந்த இரண்டு அறைகளில் மட்டுமே விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

இந்தச்சம்பவம் தொடர்பாக எனக்கு எவர் மீதும சந்தேகம் இல்லை.

இப்படி அவர் தெரிவித்தார்.

இவர்களின் வீட்டுக்கு அருகிலுள்ள கிராமசேவையாளர் வைரமுத்து சந்திரராஜ்(வயது 42) என்பவரும் சாட்சியமளித்தார்.

நிமலராஜனின் மரணம் தொடர்பான தீர்ப்பு யாழ். நீதிமன்றத்தால் நேற்று வழங்கப்படவிருந்தது.(இ-5-ரி)

# பண்டாரவளைப் படுகொலைகள் திருமலைத் தாக்குதலுக்குப் பதிலடியாம்

## விடுதலைப் புலிகள் தரப்பு அறிக்கை

திருமலைத் துறைமுகத்தில் இலங்கைக் கடற்படைத்தளம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலுக்குப் பதிலடியாகவே பண்டாரவளை விந்துனுவெவ தடுப்பு முகாம் படுகொலைகள் இடம்பெற்றிருக்கின்றன - என்று விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை அரசியல் துறை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளைப படுகொலையைக் கண்டித்து 'மற்றுமொரு வெலிக்கடை பண்டாரவளைப் படுகொலை' என்ற தலைப்பில் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை அரசியல் பிரிவினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

மற்றுமொரு சிறைச்சாலை படுகொலை கடந்த 25ஆம் திகதி பண்டாரவளையில் சிங்கள பேரினவாதிகளால் நிகழ்த்தப்பட்டுள்ளது. 23ஆம் திகதி திருகோணமலை கடற்படைத்தளத்தில் விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட பாரிய தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாதவர்கள் அதற்கு பழிவாங்கும் முகமாக சிறைச்சாலையில் உள்ள தமிழ் இளைஞர்களைப் படுகொலை செய்துள்ளனர். தமிழ் இளைஞர்களின் இரத்தக் களரி சிங்கள தேச சிறைச்சாலைகளை கழுவும் தொடர்கதையாகி உள்ளது.

தமிழன் அடிவாங்கும் அடிமையல்ல. அவனால் பதிலடி கொடுக்கவும் முடியும் - என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-21-8)

### உயிரிழப்பு

எழுதுமட்டுவாழ் பகுதியில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் மறைவாணி(இராமச்சந்திரன் துஷ்யந்தினி-கிளிநொச்சி) என்பவர் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

# சந்திரசேகரனை உடனடியாக விடுவிக்குமாறு தமிழ்க் காங்கிரஸ் உட்பட 5 கட்சிகள் கோரிக்கை

கொழும்பு,நவ.2

மலையக மக்கள் முன்னணித் தலைவரும் நுவரெலியா மாவட்ட ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் உடன் விடுவிக்கப்படவேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியினால் கொழும்பில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஐ.தே.க., இலங்கைத் தேசிய தொழிலாளர் காங்கிரஸ், புளொட், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் அடங்கிய கூட்டமொன்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் தமிழர்களை பாதிக்கக் கூடிய விடயங்களுக்கு எதிராக ஒரே குரலில் கண்டனம் தெரிவிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரங்கள் வருமாறு:-

☆ பண்டாரவளை தடுப்பு முகாமில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பு விசாரிப்பதற்கு சர்வதேச பங்களிப்புடன் நீதியான ஆணைக் குழு நியமனம் செய்யப்பட வேண்டும்.

☆ பயங்கரவாதத் தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

☆ தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக இதுபோன்ற கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் கூட்டப்பட வேண்டும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ரெலோ போன்ற கட்சிகளுக்கும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுவிக்கப்பட்டதாகவும் கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் கூட்டத்தில் கலந்து கொள்ளாத போதும் தமிழருக்கு எதிரான சம்பவங்களை கண்டிப்பதில் ஒன்று சேர்ந்து செயற்படுவதாக அவர் கூறியதாகவும் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயமூர்த்தி தெரிவித்தார். (இ-5)

# திருமலைத் துறைமுகப் பகுதியில் மீன்பிடிப்பதற்குத் தடை!

திருகோணமலைத் துறைமுகத்தின் பாதுகாப்புக்கருதி அப்பகுதியில மீன்பிடிப்பதற்கு பாதுகாப்புப் படையினர் தற்காலிகமாக தடையை விதித்துள்ளனர்.

கடந்த திங்களன்று திருகோணமலைத் துறைமுகப் பகுதியினுள் விடுதலைப் புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம் பெற்றதை அடுத்து இந்தத் தடைஉத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை அப்பகுதியில் மீன்பிடிக்கப் படையினர் அனுமதி வழங்கியிருந்தனர்.

தற்போது அமுலாக்கப்பட்டுள்ள இந்தத் தடையால் கிண்ணியா, மூதூர், கொட்டியாறு பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். (அ-8-4)


உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நம

# திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விக்கிரம வருடம் ஐப்பசித் திங்கள் 18ஆம் திகதி (03.11.2000) நாளை வெள்ளிக்கிழமை பகல் 9.29 மணிமுதல் 10.24 மணிவரையுள்ள ஸப்தமி திதியும் சித்த யோகமும் தனுலக்கினமும் கூடிய சுப முகூர்த்த வேளையில்;

எமது செல்வப் புத்திரன் திருநிறை செல்வன் **இந்திரன்** அவர்களுக்கும்

எமது செல்வப் புத்திரி திருநிறை செல்வி **அனிதா** அவர்களுக்கும்

மீனாட்சி அம்மன் திருவருள் துணைகொண்டு திருமாங்கல்ய தாரணம் செய்யப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு, சென்னை 600040, அண்ணாநகர், 3ஆம் அவென்யூ, 118 ஆம் இலக்கத்திலுள்ள 'ஹோட்டல் நியூ ராஜ் பவான்' கல்யாண மண்டபத்தில் நடைபெறும் திருமண வைபவத்திற்கு தாங்கள் தாங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, தொடர்ந்து நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தாங்கள் நல்வரவை விரும்புவர்

திரு. திருமதி செல்லையா,
திரு. திருமதி தர்மரத்தினம் (France),
4ஆம் குறுக்குத் தெரு,
கச்சாய் வீதி, சாவகச்சேரி.

திரு. திருமதி இரத்தினதுரை
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

இரு வீட்டார் அழைப்பு

(80038)

இடப்பெயர்வு காரணமாக தனிப்பட்ட அழைப்பு அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.



# முதலாவது அகவை தின வாழ்த்து




## செல்வன் மேகலன்

நெடுந்தீவு மேற்கைச் சேர்ந்த 'மணிரத்தினம் அன்புச் சோலை' **திரு.திருமதி இராசலிங்கம் - விஜயராணி** தம்பதிகளின் அருந்தவப் புதல்வன் செல்வன் மேகலன் தனது முதலாவது அகவை தினத்தை இன்று (02-11-2000) வியாழக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

அப்பா, அம்மா, அம்மம்மாமார், தாத்தாமார், மாமாமார், அத்தைமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், அப்பப்பாமார், அப்பம்மாமார், அண்ணாமார், அக்காமார், பூட்டன்மார், பூட்டிமார், உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் மேகலனை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

'மணிரத்தினம் அன்புச் சோலை'
நெடுந்தீவு மேற்கு,
பெரியதுறை -2, நெடுந்தீவு.

கா.சுந்தரலிங்கம்
சித்தப்பா
கொழும்பு - 13

(80054)

## ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

22.10.2000 அன்று கொழும்பில் அமரத்துவமடைந்த
முன்னாள் யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி
சங்கீத ஆசிரியரும் சமஸ்கிருத, சங்கீத, ஆங்கில
விற்பன்னரும் இசை நடனக் களஞ்சியத்தின்
ஆசிரியருமான

கானப்பிரியா

**பிரம்மஸ்ரீ ந.நடராஜ ஐயர்**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

நியந்த்ரீ

(80121)

---





## ஸ்ரூடியோ திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்!

வண்ணை நாச்சிமார்கோயிலடி கே.கே.எஸ். வீதியில்
அமைந்திருக்கும் எமது ஸ்ரூடியோவான

## "றெக்ஸ் (REX) போட்டோ ஸ்ரூடியோ"

நாளை (3-11-2000) ஐப்பசி 18ஆம் நாள் வெள்ளிக்கிழமை முற்பகல் 9.40-10.22 மணிக்குள் வரும் சுபவேளையில் புதுப் பொலிவுடன் மீண்டும் புதுமெருகூட்டப்பட்டுத் திறந்து வைக்கப்படவுள்ளது. ஆகவே உறவினர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் வருகை தந்து ஸ்ருடியோத் திறப்பு விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

☎ இத்துடன் எமது 'ஜனனி தொலைத்தொடர்பு சேவை'யும் புதிய இடத்தில் தொடர்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறேன்.

☎ 021-3384
0094 21-3384

(C/13653)

அன்புடன் அழைத்திடும்
திரு. க. தேவகுமாரன்
உரிமையாளர்.

---

## நெஞ்சில் இருந்து நீங்காத எம் தோழியின்
## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
17
-
04
-
1981



மறைவு
02
-
11
-
1999

### செல்வி சியாமளா ஆறுமுகம்

(களபூமி, காரைநகர்)

மாணவர் குழாத்தின் பாசமிகு தோழியே சியாமளா
எங்கே உனை காலன் கவர்ந்து சென்றானோ?
மாலைப் பொழுதில் நீராடச் சென்ற எம் தோழி சியாமளாவை
தலைமைத்துவம் பேசவிடாமல் முதல் நாளே காலன் கவர்ந்தது
ஏனோ?
நற்பண்புகள் நிறைந்த தோழி சியாமளாவை - இழந்து
தோழமைகள் அனைத்தும் ஏங்குகின்றதே!
மாதங்கள் பன்னிரண்டு உருண்டோடினாலும்
உனது நினைவுகள் என்றைக்கும் எமைவிட்டு நீங்காது.
எம்தோழி இறைவன் திருவடியில் வாழ்வதால்
தோழமைகள் அனைத்தும் அவனடி தொழுது
ஆறுதல் பெறுவோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**2001 வர்த்தக கலைப்பிரிவு மாணவர்கள்,
காரைநகர்.**

(80069)

---

## யா/தேவரையாளி இந்துக்கல்லூரி,
கரவெட்டி.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையிற் சித்தியடைந்த மாணவர்களைப்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன்
**க.ராம்**
புள்ளி-172
(மாவட்ட நிலை-27)



செல்வன்
**ஜெ.கேசவன்**
புள்ளி-151



செல்வன்
**வி.மதனராஜன்**
புள்ளி-139

ஆகியோருடன் க.பொ.த. உயர்தரம் 1999 கலைப்பிரிவில் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட ஏழு (50%) மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

கரவெட்டி


(80106)

- ஆசிரியர் கழகம்

---

## நினைவுகளாய் நெஞ்சில் சுமக்கும்
# முதலாம் ஆண்டின் நிறைவு நாளில்

முகிழ்ப்பு
16
-
09
-
1963



பறிப்பு
02
-
11
-
1999

## தோழர் ரமேஷ்
# அற்புதராசா நடராசா

ஆறாம் விரலாய் பேனா ஏந்திய அற்புதனே!
ஆறவில்லையடா உன் இழப்பின் துயரம்!

ஈழச்செய்தியாய் எழுதத் தொடங்கி
ஈழ முழக்கமாய் எழுந்து நின்றாய்!

மக்களின் குரலாய் வானலையில் ஒலித்து
திக்கெட்டும் வியாபித்து நின்றாய்!!

இன வரலாற்றில் ஈடில்லா சாதனையாய்
தினமுரசு வார இதழைத் திறம்படச் செய்தாய்!

உன் பணிகள் எழுத, உன் பணிகள் தொடர
இரவுகளையும் பகலாக்கி முயல்கிறோம் தோழனே!

புழுதி கலந்த காற்றை வீசும் செம்மண் பரப்பில்
கால் பதித்து நிற்கின்றோம் தோழனே!

உன் நினைவுகளை நெஞ்சில் சுமந்தபடி

**ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி
(ஈ.பி.டி.பி.)**

(C/13658)

## புனர்வாழ்வு கிடைக்குமென நம்பிய

# இளைஞர் மீது கொடூரத் தாக்குதல்

### ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை கண்டனம்

மட்டக்களப்பு, நவ. 2

புனர்வாழ்வு கிடைக்குமென நம்பி, குற்றவாளிகள் என நிரூபிக்கப்படாத நிலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் மீது நடத்தப்பட்ட கொடூரமான தாக்குதல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இவ்வாறு திருகோணமலை — மட்டக்களப்பு மாவட்டங்களின் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

பண்டாரவளை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிராயுதபாணிகளான தமிழ் இளைஞர்கள் கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டமை மிகுந்த அதிர்ச்சியையும், துயரத்தையும் தருகின்றது.

படையினரின் முழுக் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு முகாமில் இடம்பெற்றுள்ள இந்தப் படுகொலைகள் பல்வேறு சந்தேகங்களையும் தோற்றுவிக்கின்றன. அத்துடன் தமிழ் மக்களின் பாதுகாப்பைக் கேள்விக்குறியாக்கியுள்ளன.

படையினரின் பாதுகாப்பிலுள்ள தடுப்பு முகாம்களில் கடந்த காலங்களிலும் இது போன்ற படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. ஆனால் இது தமிழ் — இந்து மக்கள் தீபாவளித்தினத்தைக் கொண்டாடும் சூழ்நிலையில் இடம்பெற்றுள்ள மூர்க்கத்தனமான செயல் ஆகும்.

இக்கொலைகள் திட்டமிட்ட செயல் என்றே நாம் ஐயப்படவேண்டியுள்ளது.

அரசின் நேரடிப் பொறுப்பிலுள்ளவர்களின் உயிர்களைக் காப்பது ஒரு ஜனநாயக அரசின் முக்கிய கடமை.

ஆகவே அரசு காலம் தாழ்த்தாது நீதியான விசாரணைகளை நடத்தி குற்றவாளிகளைக் கண்டறிவதோடு எதிர்காலத்தில் இத்தகைய படுகொலைகள் இடம்பெறாதவாறு உறுதியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அரசிடம் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-8)

## சந்திரசேகரனை விடுதலை செய்யக் கோரி சுவரொட்டிகள்

கொழும்பு, நவ. 2

விந்துனுவெவ தமிழ்இளைஞர்களின் படுகொலையைக் கண்டித்துத் தலவாக்கொல்லையில் மலையக மக்கள் முன்னணி ஒழுங்கு செய்திருந்த ஆர்ப்பாட்டக் கண்டனக் கூட்டத்தினைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதி இன்மை, கலவரம் தொடர்பாக முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார். இதனை ஆட்சேபித்தும் உடனடியாகச் சந்திரசேகரனை விடுதலை செய்யக் கோரியும் தோட்டத் தொழிலாளர்கள் நுவரெலியா மாவட்டத் தோட்டங்களில் பெருமளவில் பதாகைகளையும், சுவரொட்டிகளையும் வெளியிட்டுள்ளனர்.

'சந்திரசேகரனை விடுதலை செய்!', 'தமிழனைத் தமிழனே காட்டிக் கொடுக்காதே!' 'பாட்டனையும் மிஞ்சிவிடாதே!' போன்ற சுலோகங்கள் சுவரொட்டிகளில் காணப்படுகின்றன.

இதேவேளை —

'சந்திரசேகரனை விடுதலை செய்!' என்ற கோசத்தை முன்வைத்துப் பொகவந்தலாவையில்தொழிலாளர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றினையும் நடத்தியதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வயோதிப மாதைத் தாக்கிவிட்டு காரையும் சேதப்படுத்தினர்

### கரவெட்டியில் சம்பவம்

நள்ளிரவு வேளை, கொட்டன்கள், கல்லுகளுடன் வீடு ஒன்றுக்குள் புகுந்த இனந்தெரியாத நபர்கள் அங்கு உறங்கிக் கொண்டிருந்த வயோதிப மாது ஒருவரை கண்டபடி தாக்கிவிட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்ட மோட்டார் கார் ஒன்றையும் சேதப்படுத்தினார்கள்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12மணியளவில் கரவெட்டி மத்தி தச்சன் தோப்பு பகுதியில் இடம் பெற்றது

கொட்டன்களினால் தாக்கப்பட்டுக் காயமடைந்த இதே இடத்தைச் சேர்ந்த க. பொன்னம்மா (வயது 62) என்பவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து நெல்லியடி பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (இ-109)

### வலி. மேற்கு பிரதேசத்தில்

## அனுமதி பெறாத மது விற்பனை நிலையங்கள் மூடப்படும்

யாழ்ப்பாணம், நவ. 2

வலி.மேற்கு பிரதேசத்தில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட கடைகள், அங்கிகாரம் பெறாத மதுபான நிலையங்கள் ஆகியவற்றை அகற்றுவதென வலி.மேற்கு பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வலி.மேற்கு பிரதேசசபைத் தலைவரும், ஈ.பி.டி.பி. அமைப்பின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான ந. திரிலோகநாதன் தலைமையில் இக் கூட்டம் கடந்த வாரம் நடைபெற்றது.

அங்கீகாரம் பெறாத பல மதுவிற்பனை நிலையங்கள் இப்பிரதேசத்தில் செயற்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளதை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## திருடர்களைப் பிடிக்க உதவுமாறு கோரிக்கை

நவாலிப் பகுதியில் திருட்டுக்கள் அடிக்கடி இடம்பெற்று வருவதால் மக்களை அவதானமாக இருந்து திருடர்களைப் பிடிப்பதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கோரப்பட்டுள்ளது

அண்மைக்காலமாக திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் திருடர்களைப் பிடிப்பதற்காக கடுமையான காவல் போடப்பட்டிருந்த போதும் திருடர்களைப் பிடிக்க முடியாமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-ரி)

## சாவகச்சேரி வங்கிக் கிளையில் மேலும் தளபாடங்கள் மீட்பு

தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கும் சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளை விரைவில் பருத்தித்துறை நகரில் உள்ள மாடிக் கட்டடத்தில் இயங்கவுள்ளது.

சாவகச்சேரியில் கைவிட்டு வந்த வங்கியின் தளபாடங்கள், இரும்புப்பெட்டகங்கள் மற்றும் ஆவணங்களின் ஒரு தொகுதி என்பன கடந்த சனியன்று மீட்டுவரப்பட்டதை அடுத்தே வங்கிக்கிளை பருத்தித்துறையில் இயங்க வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வங்கியில் கைவிட்டு வந்த பணம் மற்றும் முக்கிய ஆவணங்கள் கடந்த மாதம் மீட்கப்பட்டன. தற்போது இந்த வங்கிக் கிளை யாழ்ப்பாணத்திலும் செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் பருத்தித்துறையிலும் இயங்குவது தெரிந்ததே.

மாவட்ட சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி அபயவர்த்தனா, பிராந்திய முகாமையாளர் எஸ். பாலசுப்பிரமணியம், சாவகச்சேரி கிளை முகாமையாளர் ஏ.ரி.ஏ. தேவராசா, பிராந்திய உதவி முகாமையாளர் ஜெயரத்தினம் உட்பட வங்கி அதிகாரிகள் கடந்த சனியன்று சாவகச்சேரிக்குச் சென்று அங்கு எஞ்சியிருந்த தளபாடங்கள். இரும்புப் பெட்டகங்கள் ஆகியவற்றை மீட்டு வந்தனர். (ஐ-117)

# ஓவியத்தில் நவீன சிந்தனைகளை புகுத்திய ஒப்பற்ற கலைஞர் மாற்கு

### அஞ்சலிக் கூட்டத்தில் உரை

குருநகர், நவ. 2

ஓவியத்தில் நவீன சிந்தனைகளைப் புகுத்தியவர் அமரர் மாற்கு. இது யாழ்ப்பாணத்தின் ஓவிய வரலாற்றில் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

யாழ் திருமறைக் கலாமன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட அமரர் ஓவியர் மாற்குவின் அஞ்சலி நிகழ்வில்கலந்து கொண்டு உரையாற்றிய போது வடமராட்சி கல்வி வலய அழகியலுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் சிவசுப்பிரமணியம் (ரமணி) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த அஞ்சலி நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது மண்டபத்தில் ஓவியர் அ. வ. ஆனந்தன் தலைமையில் நடைபெற்றது.

ஓவியர் ரமணி தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஓவியர் மாற்கு மாணவருடன் மாணவராகப்பழகுவார். அவர் மற்றவர்களிடம் ஆற்றலை உருவாக்கக்கூடிய அபார சக்தியுடையவர், தன்னிடத்தில் ஓவியம் பழக வந்த மாணவர்களிடம் எதுவித கொடுப்பனவுகளையும் பெறாமலேயே அவர்களுக்கு ஓவியம் பழக்குவித்தவர். ஓவியத்திலே மிகுந்த ஈடுபாடுடையவர். ஊடகத்தை இவர் பார்ப்பதில்லை கையில் கிடைக்கும்எப்பொருளையோ நிறத்தையோ பயன்படுத்தி காலத்தால் அழியா சிறப்பான படங்களை வரைந்துள்ளார். இவர் இறந்தாலும் இவரது படைப்புக்கள் வாழ்ந்துகொண்டுள்ளன. இவைகளைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரதும் கடமையாகும் — என்றார்.

தென்மராட்சி கல்விவலயத்தின் அழகியலுக்கான உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். கைலாசநாதன் தமது உரையில்:—

சிற்ப ஆசிரியராகவும், ஓவியராகவும் இருந்து தனது படைப்புக்களில் வெற்றி கண்டவர் மாற்கு. மற்றவர்களுக்கு கற்பிக்கவேண்டும் என்பதில் விசாலமாக இருந்தவர் அவர் — என்றார்.

ஓவியர் அ. வ. ஆனந்தன் தமது தலைமை உரையில் கூறியதாவது:—

டாவின்சி, பிக்காசோ போன்று யாழ்ப்பாணத்தின் ஓவியக்கலையில புதுமையைப் புகுத்தியவர் மாற்கு. யாழ். திருமறைக் கலாமன்றத்துக்கும் தமிழ் மண்ணுக்கும் சேவை புரிந்தவர். இவர். கலைப்பற்று, தமிழ்ப்பற்று, மனிதப்பற்று உடையவராக இருந்தார்.

தென்னிலங்கையில் உள்ள குருநாகலில் பௌத்த சிங்கள இனத்தின் வழித்தோன்றலாவார்எனினும் தான் பிறந்து வளர்ந்த யாழ். மண்ணில் ஓவியக்கலையில் நவீனத்தைப் புகுத்தி அக்கலையில் பல மாணவர்களை உருவாக்கினார் — என்றார்.

எழுத்தாளர் அ. யேசுராசா தமதுரையில்: —

யாழ்ப்பாணத்தில்தற்போது மரணங்கள் சர்வ சாதாரணமாக உள்ளன. ஒரு சிலரது மரணம் பாறாங்கல்லைத் தூக்கிப் போட்டதுபோல உள்ளது. அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் அண்மையில் ஏற்பட்ட இருவரது மரணங்கள் எமக்கு மிகுந்த வேதனை தருவதோடு நாளாந்தம் நினைக்கக் கூடியதாகவும் உள்ளன. அதில் முதலாவது பத்திரிகையாளன் மயில்வாகனம் நிமலராஜனுடையது. அடுத்தது ஓவியர் மாற்குவினுடையது. மாற்கு பெருமையில்லாதவர்; மிகஎளிமையானவர்; கர்வம் இல்லாதவர்; புகழில் அக்கறையில்லாதவர்; பணம் தேடவேண்டும் அதனைச் சேர்த்து வைக்கவேண்டும் என்பதில் அக்கறை இல்லாதவர். தம்மிடம் ஓவியம் பயில வந்த மாணவர்களிடம் இலவசமாகவே வகுப்புக்களை நடத்தியவர். இவரது குடும்பம் மிகுந்த கஷ்டத்தில், பொருளாதார நெருக்கடியில் இருந்தபோதிலும் மாணவர்களிடம் பணம் அறவிடாமலேயே ஓவிய, சிற்பக் கலைகளைப் பயிற்றுவித்தவர். தனது புகழைவிட தாம் பயிற்றுவித்த மாணவர்களின் படைப்புக்களை முதன்மைப் படுத்தி காட்சிக்கு வைத்து அதன் மூலம் அவர்களை வெளி உலகிற்கு அறிமுகப்படுத்தியவர். சலுகை அரசியலில் விருப்பமில்லாதவர். உரிமை அரசியலில் அக்கறை உள்ளவர். அரசு தமிழ் மக்கள் மீது திணித்த யுத்த நெருக்கடிகளை தமது ஓவியத்தின் மூலம் வெளிப்படுத்தியவர் — என்றார்.

இந் நிகழ்வில் ஓவியர் எஸ். இராசையா, ஆசிரியை திருமதி ம. அம்பலவாணர் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்

அஞ்சலி நிகழ்வின் ஆரம்பத்தில் கலைத்தூது மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த அமரர் ஓவியர் மாற்குவின் உருவப்படத்துக்கு யாழ். திருமறைக் கலாமன்றத்தின் மூத்த உறுப்பினர் அ. பேர்மினஸ் மலர்மாலை அணிவித்தார். (ஐ-51)

## தென்மராட்சி மாணவருக்கான சிறுவர் தினப் போட்டிகள்

தென்மராட்சி, நவ. 2

சர்வதேச சிறுவர் தினத்தையொட்டித் தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேச செயலகங்களின் அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயத்தினர் மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகளை இன்றும் நாளையும் நடத்தவுள்ளனர்.

போட்டிகள் கீழ்ப்பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவுகளாக நடத்தப்படும். தரம் 3 தொடக்கம் தரம் 6 வரை கீழ்ப்பிரிவாகவும், தரம் 7 தொடக்கம் தரம் 9 வரை மத்திய பிரிவாகவும், தரம் 10 தொடக்கம் தரம் 13 வரை மேற்பிரிவாகவும் போட்டிகள் நடைபெறும்

கட்டுரைப் போட்டிகள் இன்று வியாழன் பிற்பகல் 1.00 மணிக்கு வடமராட்சியில் தங்கியுள்ள மாணவர்களுக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும்— வலிகாமத்தில் தங்கியுள்ள மாணவர்களுக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும் நடைபெறும்.

பேச்சுப் போட்டிகள் மூன்று பிரிவுகளுக்கும் நாளை வெள்ளி காலை 10.00 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடத்தப்படும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா அறிவித்துள்ளார்.

போட்டிகளில் வெற்றி பெறும் மாணவர்களுக்குப் பெறுமதிமிக்க பரிசில்களை வழங்கத் தென்மராட்சிப் பிரதேச செயலகம், பளைப் பிரதேச செயலகம் ஆகியவை தலா 6 ஆயிரம் ரூபா வீதம் நிதி வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## பரீட்சை அனுமதி அட்டைகள்

யாழ்ப்பாணம், நவ. 2

பொது எழுதுநர் சேவையின் அதிசிறப்புத்தரத்துக்குப் பதவி உயர்த்துவதற்கான போட்டிப் பரீட்சைகள் எதிர்வரும் 4 ஆம், 5 ஆம் திகதிகளில் யாழ் வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலையில் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் அனுமதி அட்டைகளை கொக்குவில் இந்துக்கல்லூரியில் தற்காலிகமாக இயங்கும் யாழ். வலயக்கல்வி அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-ரி)

## தாய்லாந்து விமான நிலையத்தருகே
# விமானம் வீழ்ந்து நொறுங்கியதில்
# 79 பயணிகள் உயிரிழந்தனர்
## 11 பேர் காயமின்றித் தப்பினர்

தாய்பே, நவ. 2

தாய்லாந்து விமான நிலையத்தில் இருந்து புறப்பட்ட சிங்கப்பூர் ஏயார் லைன்ஸ் விமானம் விபத்துக்குள்ளானதில் 79 பேர் கொல்லப்பட்டனர், உயிர்தப்பியவர்களில் பலர் ஆபத்தான நிலையில் தொடர்ந்து இருந்து வருவதால் உயிரிழப்புக்கள் மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகிறது.

தாய்பே சியாங்கை ஷேக் விமான நிலையத்தில் இருந்து நேற்று முன்தினம் இரவு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு 159 பயணிகளுடனும் 20 பணியாளர்களுடனும் புறப்பட்ட சிங்கப்பூர் ஏயார்லைன்ஸ் விமானம் ஒடு பாதையிலிருந்து கிளம்பிய சிறிது நேரத்தில் தரையில் விழுந்து நொறுங்கி 3 பகுதிகளாகப் பிரிந்து எரிந்தது.

இதில் 79 பேர் விபத்து நடந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும், அவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த விமான நிலைய அதிகாரிகள் 56 பயணிகள் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் 11 பேர் காயங்களின்றித் தப்பியுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

விமானத்தின் சிதைந்த பாகங்களில் எரியும் தீயை அணைத்து மீட்புப் பணிகளில் தியணைப்புப் படைவீரர்கள் ஈடுபட்டு வருவதாகவும், நொறுங்கிய விமானத்தின் சிதைவுகளுக்குள் மேலும் சடலங்கள் இருக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

(ஒ-8)

## இந்தோனேசியாவில் நிலச்சரிவு; மண்ணில் புதைந்து 40 பேர் பலி!

ஜகார்த்தா, நவ. 2

இந்தோனேசியாவின் மத்திய பிரதேசத்தில் கடும் மழையினால் ஏற்பட்ட மண்சரிவில் புதைந்து 40 பேர் பலியாகினர். சுமார் 100 வீடுகள் மண்ணால் மூடப்பட்டுள்ளதாகவும்—

அந்த வீடுகளில் வசித்தவர்கள் பலரும் உயிரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மழை தொடர்ந்து அப்பிரதேசத்தில் பெய்து வருவதால் மீண்டும் மண்சரிவுகள் ஏற்படலாம் என்றும், ஆபத்தான பகுதிகளில் வசிக்கும் மக்கள் இடம்பெயர்ந்து பாதுகாப்பான பகுதிகளில் குடியமர்ந்து வருவதாகவும், அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர். இந்தோனேசியாவில் பருவமழை கடுமையாகப் பெய்து வருவதால் சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நிவாரண, புனரமைப்புப் பணிகள் தீவிரமாக மேற்கொள்ளப்படுவதாக அரசு அறிவித்துள்ளது,

(ஒ)

## இஸ்ரேல் ஆக்கிரமிப்புப் பகுதிக்கு
# ஐ.நா. படைகளை அனுப்பும்படி பலஸ்தீன மக்கள் கோரிக்கை

காஸா, நவ. 2

1967 ஆம் ஆண்டு வளைகுடாப்போரில் இஸ்ரேல் ஆக்கிரமித்த பகுதிகளில் வசிக்கும் பலஸ்தீன மக்களைக் காக்க ஐ.நா கண்காணிப்புப் படைகளை பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று பலஸ்தீனர்கள் ஐ நாவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பலஸ்தீனப் பொது மக்கள் சார்ந்த அமைப்புகள் கூட்டாக இந்த வேண்டுகோளை ஐ.நாவுக்கு தெரியப்படுத்தியுள்ளன.

ஜெருசலேம் மற்றும் பலஸ்தீனப் பகுதிகளில் வசிக்கும் பலஸ்தீனப் பொதுமக்களைப் பாதுகாக்க ஐ. நா பாதுகாப்புப் படைகளை அனுப்ப வேண்டும் என்று கடந்த வாரம் பலஸ்தீனர்கள் விடுத்த கோரிக்கை தொடர்பாக முடிவு எடுப்பதை ஐ.நா சபை ஒத்திப் போட்டிருக்கும் வேளையில் புதிய வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-8)

## பலஸ்தீனருடனான சமாதானம் குறித்து
# இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் பராக்- ஷெரோன் வாக்குவாதம்

டெல்அவிவ், நவ. 2

மேற்காசிய சமாதானம் குறித்து இஸ்ரேலிய நாடாளுமன்றத்தில் பிரதமர் எகுட் பராக்குக்கும் எதிர்க்கட்சித் தலைவர் ஏரியல் ஷெரோனுக்கும் இடையே கடும் வாக்குவாதம் இடம்பெற்றது.

பலஸ்தீனர்களுடனான சமாதானப் பேச்சுக்கள் முறிவடைந்து மேற்காசியப் பகுதிகளில் இருதரப்பிற்கும் இடையே மோதல்கள் நிகழ்ந்து வரும் நிலையிலும்

பிரதமர் பராக்கின் ஆளும் கூட்டணி பெரும்பான்மைப் பலத்தை இழந்து கவிழக் கூடிய சூழ்நிலையில் —

பரபரப்புடன் இஸ்ரேலிய நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியது.

அங்கு பேசிய பராக், பலஸ்தீனர்களுடனான சமாதானம் தொடர்பாகச் சாத்தியமான சூழ்நிலை உள்ள போதும் சமரசம் செய்ய எவரும் இல்லை என்று குறிப்பிட்டார்.

இதற்கு கடும் கண்டனம் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவர் ஏரியல் ஷெரோன் பலஸ்தீனர்களுடன் அமைதியை ஏற்படுத்த பராக் எடுக்கும் முயற்சிகள் இஸ்ரேலைப் பலவீனப் படுத்துவதாகக் குற்றம் சாட்டினார்.

இதனையடுத்து இரு தலைவர்களும் வாக்கு வாதத்தில் ஈடுபடடதாகக் கூறப்படுகிறது.

ஜெருசலேம் பள்ளிவாசலுக்குள் ஷெரோன் சென்றதாலேயே தற்போது மேற்காசியாவில் நிகழ்ந்துவரும் மோதல்கள் ஆரம்பித்தது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில் மேற்காசியாவில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையேயான மோதல்களில் இஸ்ரேலிய யூதர்கள் இருவரும், 4 பலஸ்தீனர்களும் வெவ்வேறு சம்பவங்களில் நேற்றுக் கொல்லப்பட்டதாகவும்—

இதுவரை இரு தரப்பிலும் 158 பேர் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

(ஒ—8)

## பண்டாரவளை கொலைகளுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கண்டனம்

சென்னை, நவ. 2

பண்டாரவளைப் புனர்வாழ்வு முகாமில் இடம்பெற்ற படுகொலைகளை இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடுமையாகக் கண்டித்துள்ளது.

அக்கட்சியின் மாநிலச் செயலாளர் சங்கரய்யா சென்னையில் இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில்,

பண்டாரவளைப் படுகொலைகள் அப்பட்டமான மனித உரிமை மீறலாகும் என்றும்—

இலங்கை அரசு இத்தகைய செயல்களைத் தடுத்துநிறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்வதாகவும் தெரிவித்துள்ளார்.

(ஒ- 8)

## திரிணாமுல் காங்கிரஸ் தலைவருக்கு:
# வாஜ்பாய் அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை!

புதுடில்லி, நவ. 2

பெற்றோலிய விலை குறைப்பு தொடர்பாகத் திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மமதா பனர்ஜிக்கு அளித்த வாக்குறுதி குறித்து முடிவெடுக்காமல் இந்திய அமைச்சரவைக் கூட்டம் நடந்து முடிந்துள்ளது.

மத்திய அரசு பெற்றோலிய பொருள்களின் விலையை உயர்த்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ரயில்வே அமைச்சர் மமதா பனர்ஜியும், இணை அமைச்சர் அஜித் பாஞ்சாவும் தமது பதவிகளை இராஜினாமாச் செய்திருந்தனர்.

விலையைக் குறைப்பது தொடர்பாக மந்திரி சபைக் கூட்டத்தில் முடிவெடுப்பதாக பிரதமர் வாஜ்பாய் உறுதியளித்ததைத் தொடர்ந்து மமதாவும், பாஞ்சாவும் பதவி விலகலை விலக்கிக் கொண்டனர்.

இந்த நிலையில் நேற்றுமுன்தினம் கூடிய மந்திரி சபை, பெற்றோலிய விலைக் குறைப்புக் குறித்து ஆலோசனை நடத்தவில்லை. இது குறித்து பிரதமருக்கு 5 பக்கக் கடிதத்தை எழுதியுள்ளதாகத் தெரிவித்த மமதா, விலை குறைப்பை பிரதமர் ஏற்கலாம், ஏற்காமலும் போகலாம் என்றும் கூறியுள்ளார்.

(ஒ-8)

## இத்தாலியக் கப்பல் விபத்தில் சிக்கி மூழ்குகிறது

றோம், நவ. 2

இத்தாலிய நாட்டுச் சரக்குக் கப்பல் 6 ஆயிரம் தொன் இரசாயனப் பொருள்களுடன் இந்து சமுத்திரத்தில் மூழ்கிக் கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது

கடற் புயலால் தாக்கப்பட்டு சேதமடைந்த மேற்படி கப்பல் மூழ்குவதால், அதில் உள்ள இரசாயனப் பொருள்கள் கடலில் கலக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அஞ்சப்படுகிறது.

(ஒ)


## இதய பூர்வமான கண்ணீர் அஞ்சலி

கடந்த 27—10—2000 அன்று கேகாலை கண்டி வீதியில் இடம்பெற்ற கோர வாகன விபத்தின் போது

எமது சக மாணவி க. அனுஷியாவின்

அன்புத் தாயார், சகோதரர்கள, மைத்துனர்

ஆகியோரின் அகால மரணத்தினால் துயருறும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, சிகிச்சை பெற்று வரும் அனுஷியாவும், சகோதரியும் விரைவில் நலமடையப் பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் எமது சக மாணவி

ச. சுதாஜினி அவர்களின் அன்புச்சகோதரியின்

இழப்பினால் துயரடையும் அன்னாரின் குடும்பத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3 ஆம் வருட பொருளியல் சிறப்புக்கலை மாணவர்கள்,

(80114) யாழ். பல்கலைக்கழகம்.



## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி சக ஆசிரியை

செல்வி அ. நிர்மலா

அவர்களது பிரிய தந்தை

அந்தோனிப்பிள்ளை அல்பிறட்

அவர்களது மறைவையிட்டுத் துயருறும் அதே வேளை அவர்தம் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்துக் கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்.

ஆசிரியர் கழகம்,

யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை,

யா/பொன். பரமானந்தர் ம. வி.

(80120) தெல்லிப்பழை.



## மரண அறிவித்தல்

### அப்பாத்துரை மழவராயன்

(தொழில்நுட்ப உத்தியோகத்தர்,
நீர்ப்பாசனத் திணைக்களம்)

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை மழவராயன் 29 - 10 - 2000 ஞாயிற்றுக்கிழமை களுவாஞ்சிக்குடியில் காலமாகிவிட்டார்.

அன்னார் அப்பாத்துரை (கொழும்பு), காலஞ்சென்ற ஈஸ்வரியின் அன்பு மகனும், காலஞ்சென்ற வரதராசா — ஞானாம்பிகையின் (இந்தியா) மருமகனும், வசந்தியின் (இந்தியா) அன்புக் கணவரும், துஷாந்தி, மயூரன், பிரசன்னா ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், செல்வராஜன் (டென்மார்க்), செல்வமலர் (தெல்லிப்பழை), இன்பமலர் (இந்தியா), திவ்வியரஞ்சினி (கொழும்பு) ஆகியோரின் அருமைச் சகோதரனும், சயதேவி (டென்மார்க்), வெற்றிவேலாயுதம் (தெல்லிப்பழை), Dr. மாணிக்கவடிவேல் (இந்தியா), கிருஷ்ணகுமார் (ஹொலன்ட்), காலஞ்சென்ற ஆனந்தி, ஜெயந்தி (அமெரிக்கா), றமணன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும், இரட்ணகுமாரின் (அமெரிக்கா) சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2-11-2000) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு 27, நெல்சன் பிளேஸ், வெள்ளவத்தையில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கனத்தை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. வெற்றிவேலாயுதம்
(மைத்துனர்)

மயிலணி,
சுன்னாகம்.

தொலைபேசி இல. 01 — 582607 (80118)



பத்திரிகையாளர்களின் நேற்றைய ஆர்ப்பாட்டத்தின்போது எடுக் கப்பட்ட மேலும் சில படங்களை மேலே காணலாம்.

*(படங்கள் பொன்.ராஜ்)*

# 13 சடலங்களும் நேற்று புலிகளிடம் ஒப்படைப்பு!

யாழ்ப்பாணம்,நவ.2

மட்டுவில், சரசாலைப் பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்ததாகத் தெரிவித்து படையினரால் யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்த 13 சடலங்களும் நேற்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்பட்டன.

நேற்று முற்பகல் யாழ்.ஆஸ்பத்திரியில் இருந்து இச்சடலங்களை ஏற்றிச் சென்ற படையினர் குருநகர் இறங்குதுறையில் வைத்து செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரிடம் அவற்றைக் கையளித்தனர். சடலங்களைப் பொறுப்பேற்ற செஞ்சிலுவை அதிகாரிகள் அவற்றை குடாக்கடல் ஊடாக படகுகளில் ஏற்றிச் சென்று புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பூநகரி கல்முனைக் கரையோரத்தில் வைத்து விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சடலங்கள் கடந்த மாதம் 28 ஆம், 29 ஆம், 30 ஆம் திகதிகளில் படையினரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தும் ஆண்களின் சடலங்கள் ஆகும்.

சடலங்களைக் கையளிக்கும் ஏற்பாட்டை அடுத்து நேற்று புதன்கிழமை குடாக்கடலில் தொழிலுக்குச் செல்ல மீனவர்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

(ஜ-15-17-51-139)

# படுவான்கரையில் நடந்த கண்டனப் பேரணி

மட்டக்களப்பு,நவ.2

பண்டாரவளைப் புனர்வாழ்வு நிலையத்தில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்தும் - மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கு ஆட்சேபம் தெரிவித்தும்- மட்டக்களப்பு மாவட்டத்தின் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான படுவான்கரையில் நேற்றுமுன்தினம் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

பட்டிப்பளை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இதனை ஏற்பாடு செய்திருந்தது.

நேற்றுமுன்தினம் 10 மணியளவில் அம்பிலாந்துறை முத்துலிங்கப் பிள்ளையார் ஆலயச் சந்தியிலிருந்து ஒரு பேரணியும், கொக்கட்டிச்சோலை மணல்பிட்டிச் சந்தியிலிருந்து மற்றொரு பேரணியும் ஆரம்பமாகி பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் ஐ.நா.செயலாளருக்கு முகவரியிடப்பட்ட மகஜர் கையளிக்கப்பட்டதுடன் முடிவடைந்தது.

மகஜரின் பிரதிகள் பிரதமர், ஜனாதிபதி, செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கொழும்பு வதிவிடப் பிரதிநிதி மற்றும் சர்வதேச மன்னிப்புச்சபை ஆகியவற்றுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

பேரணியில் கலந்துகொண்டோர்,

☆ தமிழினமே! எமக்கென்று ஒரு நாடு இருந்தால் எம்மினம் அழியுமா?

☆ புத்தரின் காருண்யம் காட்டு மிராண்டித்தனமா?

☆ புகலிடம் என்று அழைத்தாய் புதைகுழியை பரிசளித்தாய்!

முதலிய சுலோகங்கள் அடங்கிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் அரச ஊழியர்கள், பொதுமக்கள் என சுமார் ஐயாயிரத்துக்கும் அதிகமானோர் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

பேரணியின் முடிவில் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சர்,முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் கொடும்பாவிகளும் எரிக்கப்பட்டன. (இ-7-21)

## தீர்ப்பு ஒத்திவைப்பு

யாழ்.நீதிமன்றத்தினால் நேற்று வழங்கப்படவிருந்த பத்திரிகையாளர் நிமலராஜனின் மரணம் தொடர்பான தீர்ப்பு எதிர்வரும் 6ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இம்மரணம் தொடர்பாக மூவரின் சாட்சியங்கள் யாழ்.நீதிவான் இ.த.விக்னராஜா முன்னிலையில் பதிவு செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே.

(மரண விசாரணை தொடர்பான மற்றொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்) (ஜ-5-ரி)

# நேற்றைய போராட்டத்தில் காணப்பட்ட சுலோகங்கள்

யாழ்.நகர மத்தியில் பத்திரிகையாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் நேற்று நடத்திய அமைதிப் போராட்டத்தில் மனித உரிமைகள் மற்றும் பத்திரிகைச் சுதந்திரம, பேச்சுச் சுதந்திரம் என்பவற்றை வலியுறுத்தும் சுலோகங்கள் எழுதப்பட்ட பதாகைகள் காணப்பட்டன.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் வெளியிட்ட சுலோகங்களில் சில வருமாறு:-

★ பத்திரிகைச் சுதந்திரத்தில் கை வையாதே!

★ நிமால் கொலைக்கு யார் பொறுப்பு?

★ நிமலராஜன் குடும்பத்துக்கு நஷ்ட ஈடு வழங்கு!

★ குற்றவாளியைக் கண்டு பிடித்துக் கூண்டில் நிறுத்து!

★ தெற்கில் - றிச்சாட்!
வடக்கில் - நிமால்!
நாளை யாரோ?

★ நிமால் கொலையை விசாரிக்க நீதி ஆணைக்குழு நியமி!

★ DOWN WITH GUN CULTURE.

★ TRUTH NEVER SLEEPS.

★ OUR HANDS AND MOUTHS ARE TIED. FREE US FROM THESE FETTERS.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.2

அராலி இந்துக் கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழா நாளை பிற்பகல் 1.30மணிக்கு கல்லூரி அதிபர் மமகாதேவா தலைமையில கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஜ-7)

## செம்மணி புதைகுழி வழக்கு:

# குற்றப்பத்திரம் தாக்கல் செய்ய டிசெ.25 வரை அவகாசம்

செம்மணி புதைகுழி விவகாரம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டுள்ள படையினர் மற்றும் பொலீஸாருக்கு எதிராகக் குற்றப் பத்திரம் தாக்கல் செய்வதற்கு இறுதி அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி அடுத்த மாதம் 25ஆம் திகதி குற்றப்பத்திரம் தாக்கல செய்யப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நீதிபதி டி.ஜி. குலதிலகா முன்னிலையில் எடுக்கப்பட்டபோதே இந்த உத்தரவை அவர் விடுத்தார்.

கைதாகியுள்ள படையினர் மற்றும் பொலீஸாருக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யக் கால அவகாசம் வழங்கும்படி குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விண்ணப்பம் சமர்ப்பித்தனர்.

"இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளவர்களுக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல்செய்ய நீதிமன்றத்தால் பல தடவைகள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இறுதிச் சந்தர்ப்பமாக டிசம்பர் 25ஆம் திகதிவரை அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. எந்தக் காரணமும் தெரிவிக்காமல் அன்று குற்றப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும்'' என்று நீதிபதி உத்தரவிட்டார்.

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

| | நேற்றுவரை கிடைத்த நிதி:- | | ரூபா |
|---|---|---|---|
| | முன்கொண்டுவரப்பட்டது | - | 218,634 |
| 1. | து. சிறிதர் - ஐயனார் கலட்டி, பருத்தித்துறை | - | 201 |
| 2. | ஓய்வுபெற்ற ஆசிரிய அன்பர் - சுழிபுரம் வடக்கு | - | 600 |
| 3. | ஓர் அன்பர் - உசன் | - | 200 |
| 4. | பா. இரகுநாதன் - அதிபர், புலோலி மெ.மி.த.க. பாடசாலை | - | 1,001 |
| 5. | எஸ். ஆனந்தகுமாரன் - 131, அரசடி றோட், கந்தர்மடம் | - | 500 |
| 6. | திருமதி ஜே. அருள்சுந்தரம் - வி. எம். றோட், பருத்தித்துறை | - | 200 |
| 7. | திருமதி அஜந்தா லோகேஸ்வரன் - அஜந்தா ஸ்ருடியோ, சங்கிலியன் வீதி, நல்லூர் | - | 500 |
| 8. | சி. ஜெகதீஸ் - பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி | - | 100 |
| 9. | யோ. ஜெயகாந் - பத்திரகாளி கோயிலடி, திருநெல்வேலி | - | 100 |
| 10. | பாதுகாவலன் பத்திரிகை நிருபர்கள் சங்கம் | - | 5,000 |
| 11. | யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம் (ஜே. டி. பி. யு) | - | 16,200 |
| 12. | ஓர் அன்பர் - வதிரி | - | 250 |
| 13. | சிவ. கனகசபாபதி - யாழ்ப்பாணம் | - | 1,000 |
| 14. | செ. செல்லத்துரை - உடுவில் | - | 500 |
| 15. | ம. ஜானகி - 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் | - | 300 |
| 16. | அமரர் பாஸ்கரலிங்கம் நினைவாக | - | 500 |
| 17. | கே. திருஞானசம்பந்தமூர்த்தி - அரசினர் வைத்தியசாலை, பளை | - | 1,000 |
| 18. | ஓர் அன்பர் - ஊரணி, காங்கேசன்துறை | - | 200 |
| 19. | அமரர் இ. நடராசா ஆசிரியர் நினைவாக - பண்ணாகம் | - | 1,000 |
| 20. | ஓர் அன்பர் - நாவலர் வீதி, யாழ்ப்பாணம் | - | 250 |
| 21. | ஓர் அன்பர் - இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம் | - | 500 |
| 22. | விலங்கியல் துறையினர் - யாழ். பல்கலைக்கழகம் | - | 2,600 |
| 23. | ஒரு சகோதரி - நீராவியடி | - | 200 |
| 24. | ஓர் அன்பர் - உரும்பிராய் | - | 200 |
| 25. | ஒரு சகோதரி - கரவெட்டி | - | 252 |
| 26. | சென். ஜோசப் வித்தியாலய ஆசிரியர் சங்கம் - கொழும்புத்துறை | - | 1,200 |
| 27. | அமரர் தம்பிப்பிள்ளை கணபதிப்பிள்ளை நினைவாக - தாவடி | - | 500 |
| 28. | கே. சி. ஆடியபாதன் - பருத்தித்துறை | - | 500 |
| 29. | சித்ராலயா ஸ்ருடியோ - 172, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் | - | 1,000 |
| 30. | வங்கியாளர் | - | 2,600 |
| 31. | எஸ். காயத்திரி வருணன் - அச்சுவேலி | - | 500 |
| 32. | அதிபர், ஆசிரியர்கள், இணைந்த ஆசிரியர்கள் - உரும்பிராய் | - | 1,551 |
| 33. | யாழ். போதனா வைத்தியசாலை - 24ஆம் வார்ட் அலுவலர்கள் | - | 1,500 |
| 34. | ஓர் அன்பர் - சென். ஜோன்ஸ் சேச் லேபன் | - | 200 |
| 35. | ஓர் அன்புத் தாய் - புங்குடுதீவு | - | 100 |
| 36. | ஓர் அன்பர் - சுன்னாகம் தெற்கு | - | 1,000 |
| 37. | நலன்புரிச் சங்கம், உதவி அரசாங்க அதிபர் பணிமனை - ஊர்காவற்றுறை | - | 4,000 |
| 38. | சிவம் வெற்றிலைக் கடை - யாழ். பெரிய சந்தை | - | 250 |
| 39. | ச. ஆ. சோமசுந்தரம் - விளானை, களபூமி, காரைநகர் | - | 200 |
| 40. | இளைஞர் மன்றம் - யாழ். அடைக்கல அன்னை ஆலயம் | - | 2,502 |
| | | | 269,590 |

# தமிழர் குறித்த இலங்கை அரசின் போக்கை அமெரிக்கா பரிசீலனை செய்ய வேண்டும்

## அந்நாட்டு காங்கிரஸ் உறுப்பினர்கள் மூவர் கோரிக்கை

வாஷிங்டன்,நவ.2

தமிழ் மக்கள் குறித்த இலங்கை அரசின் போக்கை அமெரிக்கா பரிசீலனை செய்ய வேண்டும் என்று அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் மூவர் குரல் எழுப்பியுள்ளனர்.

பண்டாரவளைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக அமெரிக்க அரசு இலங்கை அரசைக் கண்டிக்க வேண்டும் என்று கோரி இவர்கள் அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் மெடலின் அல்பிரைய்ட்டுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை அனுப்பி வைக்கப்பட்ட அந்தக்கடிதத்தில் -

இலங்கையில் நடைபெறும் யுத்தத்துக்குக் காணப்படும் தீர்வு யாழ். குடாநாட்டுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கும் வாய்ப்பை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

பண்டாரவளைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக சுதந்திரமான, சர்வதேச விசாரணைகள் நடத்த வேண்டும் என்ற கோரிக்கைக்கு தாங்கள் ஆதரவளிக்க வேண்டும்.

குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாமல் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களை உடனடியாக விடுவிக்க இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும். இலங்கையில் சட்டதிட்டங்களுக்கும், நல்லாட்சிக்கும் மதிப்பளிக்கும் அரச சார்பற்ற அமைப்பு ஒன்றுக்கு ஒரு மில்லியன் டொலர்கள் வழங்கப்படவேண்டும் - என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் உறுப்பினர்கள் மூவரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள இந்தக் கடிதம் அமெரிக்க வெளியுறவுத்துறைக்கும், இலங்கை அரசுக்கும் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்துவதாக அமையும் என்று பி.பி.ஸி தெரிவித்தது.

(ஐ-8)

# மலையகத்தில் மயான அமைதி

கொழும்பு,நவ.2

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் மலையகத்தில் பரவலாக இடம் பெற்றுவந்த வன்செயல்கள் ஓய்ந்து நேற்று அங்கு மயான அமைதி நிலவியதாகச் செய்திகள் தெரிவித்தன.

மக்கள் வெளியே நடமாட அஞ்சி வீடுகளுக்குள் முடங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில இடங்களில் மட்டும் பொலீஸாரின் பாதுகாப்புடன் வாகனப் போக்குவரத்துக்கள் இடம்பெற்றன. பாடசாலைகள் இயங்கியபோதும் மாணவர் வரவு மிகவும் குறைந்து காணப்பட்டது.

நாவலப்பிட்டியில் இருந்து கினிகத்தேனை ஊடாக ஹட்டனுக்கு இராணுவப் பாதுகாப்புடன் பஸ் சேவைகள் இடம்பெற்றன.

இனம்புரியாத அச்ச உணர்வு மக்களிடம் தொடர்ந்து காணப்படுவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன. பொலீஸ், இராணுவ ரோந்துப் பணிகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன.(ஐ-3-10)

## 2 சடலங்கள் கரையொதுங்கின

மட்டக்களப்பு,நவ.2

வாழைச்சேனைக்கு அருகில் காயங்கேணிக் கடற்கரைப் பகுதியில் இராணுவச் சீருடையுடன் இரண்டு சடலங்கள் கரைஒதுங்கியுள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன.

அவை இனங்காணமுடியாத அளவுக்கு சிதைந்து பழுதடைந்து காணப்பட்டன என அப்பகுதி மீனவர்கள் தெரிவித்தனர். திருகோணமலை துறைமுகப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் உயிரிழந்தவர்களின் சடலங்களாக இவை இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

## சனி முதல் மீன்பிடிக்க அனுமதி

திருகோணமலைத் துறைமுகப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற தாக்குதல் சம்பவத்தை அடுத்து மீன்பிடிப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த தடை நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் நீக்கப்படவுள்ளது.

திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.எம். மஹ்ரூப் இந்த விடயம் தொடர்பாக கிழக்குப் பிராந்திய கடற்படைத் தளபதியுடன் பேச்சு நடத்தியதை அடுத்தே தடை நீக்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிண்ணியா, மூதூர்க்குடா, மாபிள் பீச், தம்பலகாமம், ஆகிய பகுதிகளிலேயே மீன் பிடிப்பதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. (ஐ-10)

## மதுரையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசிய இயக்கத்தின் பேரில் இந்தக் கண்டனச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பண்டாரவளைச் சம்பவத்தை 'தமிழர் படுகொலை' என வர்ணித்து அதற்குக் கடும் கண்டனங்களை அந்த அமைப்பு வெளியிட்டிருந்தது.

(ஐ-8)

## நோர்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துச் செல்வதோடு சந்திரிகா அரசின் இன அழிப்பு, நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை அம்பலப்படுத்தி அனைத்துலக சமூகத்துக்கு விழிப்புணர்வை உருவாக்கும் என நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சந்திரிகா அரசின் சர்வதேச சமூகத்தை ஏமாற்றும் நடவடிக்கைகளான சமாதான முயற்சி, அரசியல் தீர்வு, அரசியல் சீர்திருத்தம் என்ற டரப்புரை மாயைகளை அம்பலப் படுத்தி, சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்கள் மீது பெரும் இராணுவ ஆக்கிரமிப்பு யுத்தததையே தீவிரப்படுத்துகின்றது என்ற உண்மை நிலைமையை விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் எடுத்துக் கூறினார்.

### சமாதான வாய்ப்பு

சமாதான முயற்சிகளுக்கான வாய்ப்புகள் பற்றியும் இந்தக் கலந்துரையாடலின் போது ஆராயப்பட்டது. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைச் சந்தித்ததையும் வன்னிப் பகுதிகளின் நிலைமைகளை நேரில் கண்டு அறிந்ததையிட்டும் தாங்கள் திருப்தி அடைவதாக நோர்வே தூதுக்குழுவினர் தெரிவித்தனர்.

நோர்வே தூதுக்குழுவினர் வன்னிப் பிரஜைகள் குழுவினரையும் வெகுஜன அமைப்புகளின் பிரதிநிதிகளையும் சந்தித்தனர். இடம்பெயர்ந்து அவலப்படும் மக்களின் குடியிருப்புக்களையும் அவர்கள் பார்வையிட்டனர்.

மேற்கண்ட தகவல்களை 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு வெளியிட்டது. (அ-3-21)

## மந்துவிலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்தனர் என்றும் -

நாகர்கோயில் பகுதியில் இடம்பெற்ற மற்றொரு சம்பவத்தில் இரு விடுதலைப்புலிகள் உயிரிழந்தனர் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரணைஇலுப்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற மோதல் சம்பவம் ஒன்றில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும்,மற்றொருசிப்பாய் காயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச்சம்பவத்தில் விடுதலைப் புலி உறுப்பினர் ஒருவரும் உயிரிழந்ததாகவும் விசேட ஊடகத் தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ-3-10)

## நிமலராஜனின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குருமுதல்வர் ஏ.பி.செல்வராஜா அடிகள், யாழ்.மறைக்கோட்டக் குரு முதல்வர் அ.கிறிஸ்தோபர் மற்றும் கிறிஸ்தவ குருமார்கள், அருட்சகோதரிகள் ஆகியோரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றினர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமகாராஜா, ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன், ரெலோ முதல்வர் என்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி, அ.இ.தமிழ்க்காங்கிரஸ், புளொட், ரெலோ, புதிய ஜனநாயகக் கட்சி, உட்பட தமிழ் கட்சிகள் பலவற்றின் பிரதிநிதிகளும் ஆக்கட்சிகள் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், மகளிர் அபிவிருத்தி நிலையம், பலாலி அகதிகள் புனர்வாழ்வுச் சங்கம், கைதாகிக் காணாமல்போனோர் பாதுகாவலர் சங்கம், யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், கல்லூரி அதிபர்கள், "உதயன்" ஆசிரிய பீட அலுவலர்கள், ஊழியர்கள், "வலம்புரி", "பாதுகாவலன்" பத்திரிகையாளர்கள், வேலணை திருக்குறிப்பு தொண்டர்சபை, மனித முன்னேற்ற நடு நிலையம், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம், தேசிய கலை இலக்கியப் பேரவை, இலங்கை வானொலி யாழ்.சேவை, யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியவற்றைச் சேர்ந்தோரும் மற்றும் எழுத்தாளர்கள் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர். ஆர்ப்பாட்டம் வெகு அமைதியாகவும், ஒழுங்கு சீராகவும் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் வட இலங்கைப்பத்திரிகையாளர் சங்கத் தலைவர் சு.கதிர்காமத்தம்பி உரையாற்றினார். மூன்று முக்கிய கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றும் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுவதாக அவர் அங்கு அறிவித்தார்.

நேற்றைய இந்த ஆர்ப்பாட்டத்தை ஒட்டி யாழ்.மத்திய நகரப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. பொலீஸாரும் படையினரும் விசேட பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

(ஐ-3-5-6-7-8-10-15-17-30-31-51-173-180-139-72-133)

# கிரிக்கெட் சூதாட்ட விவகாரம்: அர்ஜுன, அரவிந்தவுக்கு தொடர்பு?

## சீ.பி.ஐ. அறிக்கையில் தகவல்

கொழும்பு,நவ.2

கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வந்த இந்தியப் புலனாய்வுத் துறை சர்வதேச கிரிக்கெட் சபைக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் இலங்கை வீரர்களான அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இந்திய வீரர்களான அஸாருதீன், ஜடேஜா, மொங்கியா, மனோஜ் பிரபாகர் ஆகியோரின் பெயர்களை அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ள இந்தியப் புலனாய்வுத் துறை, கிரிக்கட் துறையில் பிரபல்யம் பெற்ற 10 வீரர்களின் பெயர்களையும் வெளியிட்டுள்ளது. இந்தப் பத்துப் பேரில் இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க, அரவிந்த டி சில்வா ஆகியோரின் பெயர்களும் இடம்பெற்றுள்ளன.

இந்தக் குற்றச்சாட்டை அர்ஜுன முற்றாக மறுத்துள்ளார்-

இலங்கைக் கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால கருத்து வெளியிடுகையில், இந்தச் செய்தி அதிர்ச்சி தருவதாக உள்ளது. இருவரும் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்று நூறு வீதம் நம்பவில்லை, எனினும் இந்தியப் புலனாய்வுத் துறையின் அறிக்கையை நான் நம்புகிறேன் என்றார். (ஐ-3)

# கரவெட்டி இளைஞனின் சடலம் நேற்று உறவினரிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,நவ.2

பண்டாரவளை தடுப்பு முகாமில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் கொல்லப்பட்ட கரவெட்டியைச் சேர்ந்த சிற்றம்பலம் முகுந்தனின் சடலம் யாழ். மேலதிக அரச அதிபர் துவைத்திளலிங்கத்தால் நேற்று அவரது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் விமானம் மூலம் பலாலிக்கு எடுத்துவரப்பட்டிருந்த இவரின் சடலம் படையினரால் நேற்றுக் காலை யாழ்.ஆஸ்பத்திரியில் வைத்து மேலதிக அரச அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது.

யாழ்.ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இச் சடலத்தை மேலதிக அரச அதிபர் எடுத்துச் சென்று கரவெட்டியில் உள்ள அவரின் உறவினர்களிடம் ஒப்படைத்தார்.

சடலத்தில் கை,கால் துண்டிக்கப்பட்டு பொலித்தீன் பைகளில் பொதி செய்யப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இறுதிக் கிரியைக்கான செலவுக்காக பத்தாயிரம் ரூபாவை யாழ். அரச அதிபர் வழங்கியுள்ளார்.(ஐ-3-15)

# பண்டாரவளைத் தடுப்பு முகாமில் மட்டக்களப்பைச் சேர்ந்த நால்வரும் உயிரிழப்பு!

## தகவல் தாமதமாக உறவினருக்கு அறிவிப்பு

மட்டக்களப்பு,நவ.2

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தின் போது காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த நால்வர் அந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டுவிட்டதாகத் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள பழுதடைந்த சடலங்களில் இந்த நால்வரின் சடலங்களும் அடங்கியுள்ளதாக இளைஞர் விவகார அமைச்சின் செயலர் சுனில் ஜெயந்த ஜெயரத்ன, தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசெப் பரராஜசிங்கத்துக்கு அறிவித்ததை அடுத்து அது குறித்து உயிரிழந்தவர்களின் உறவினர்களிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்ததாக முன்னர் தெரிவிக்கப்பட்ட கோகிலமணி சஜீவன், சிவம் குகேந்திரன், சோமசுந்தரம் செல்வராஜா, பேரின்பநாயகம் நிமல்ராஜ் ஆகியோரே உயிரிழந்துள்ளதாக தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை -

பண்டாரவளைச் சம்பவத்தைக் கண்டித்தும், மலையக மக்கள் முன்னணித் தலைவர் பி.சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதை எதிர்த்தும் மட்டக்களப்பு நகரில் நேற்று மூன்றாவது நாளாக ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. இதனால் அங்கு இயல்பு நிலை பெரிதும் பாதிக்கப்பட்டிருந்ததாக செய்திகள் தெரிவித்தன. (ஐ-8)

## பொலீஸாரின் லீவுகள் ரத்து

பொலீஸாரின் லீவுகள் அனைத்தும் மறுஅறிவித்தல் வரை ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

இதற்கான உத்தரவைப் பதில் பொலீஸ் மா அதிபர் ரி.ஆனந்தராஜா விடுத்துள்ளார்.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண நிலை காரணமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-8)


இன்றைய புதிய வீடியோ CD வெளியீடு

கமல், ஜோதிகா, ஜெயராம், தேவயாணி

* தெனாலி

விஜய்; சிம்ரன்

* ப்ரியமானவளே

திரையரங்கிற்கு முன்னுரிமை

விஷ்ணு வீடியோ

K.K.S. Road, கோண்டாவில்.

(80123)

சிந்து திரையரங்கு

உரும்பிராய்ச் சந்தி

கமல்,ஜெயராம், ஜோதிகா,தேவயாணி நடித்த

தெனாலி

(C.D பிரதி)

காட்சிகள்: 10.30, 3.00

(C/13660)

நாளை ஆரம்பம்......!

நன்மதிப்பு

A/L 2001

Day Class

காலை 9 மணி

கணக்கீடு

D.Sam

DMI

யாழ்.நகர்

(C/13655)


# 5ஆம் ஆண்டு நினைவுகள்

| | |
|---|---|
| குவலயத்தில் | குகமயத்தில் |
| 10 - 06 - 1929 | 29 - 10 - 1995 |



## ஸ்ரீமான் ஷண்முகரத்நம் குமரேசன்

(ஓய்வுபெற்ற விரிவுரையாளர் - ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

திதி: கந்த சஷ்டி

சிந்தைக்கினியோனே ஷண்முககுமரேசன்
எந்தைக் கனியமுதே எழிலுறு மாத்தனையின்
விந்தை மயிலேறு வேலவனின் பதம் சேர்ந்தான்
இந்தப் பிறவியிலே இதயத்தின் அஞ்சலிகள்!

சாந்தி!

மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

வந்தனை செய்யும்
மனைவி, மக்கள்.

(80086)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.